REGD M. [illegible]

சந்தா விபரம்
—
1 ஆண்டு ரூ 7,
½ „ 3 8 0

# திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் | மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 19–6–49 | இதழ் 51

# இழிவு அகற்றுவீர்!

[ புதுவைச் சிவம் ]

காலையிலே கண்விழித்த மந்தி யொன்று
கண் துடைத்து வானத்தைப் பார்த்த
வண்ணம்
சோலையிலோர் நெடுமரத்தின் மீதிருக்கத்,
தோட்டத்துக் காவலாள் அதனைப்
பார்த்தே,
'நீல்நிற வானத்தில் நிகழ்வ தென்ன,
நெடுநேரம் பார்க்கின்றாய் அசையாமல் நீ?
மாலையிலே தோன்றாத காட்சி யாவும்
மலர்ந்த இந்தக் காலையினில் இருப்ப
துண்டோ?'

எனக்கேட்டான். அக்குரங்கு பார்வை தன்னை
இப்படியும் அப்படியும் திருப்பி டாமல்,
'நனியழகு பெற்றவரே புகழ்ச்சி கொள்வர்;
நானிலத்தார் அவர்தமையே மதிக்கின்
றார்கள்.
எனக்கந்த அழகில்லை, அதனால் மக்கள்
இகழ்கின்றார் அக்குறையைப் போக்க
வேண்டி,
மனத்தினிலே உண்டான ஆர்வத் தாலே
வானத்தை நோக்குகின்றேன், எனச்
சொல்லிற்று.
'வானத்தைப் பார்ப்பதனால் அழகு மிக்க
வளர்ந்திடுமோ?' எனக்கேட்டான்
தோட்டக் காரன்.
'சினத்து மகனே நீ! உனக்கிச் சேதி
தெரியாதோ சிறிதேனும்? திங்கள்,
செவ்வாய்
ஆன இரு கிழமைகளில் காலை நேரம்
அகல் வானில் கருடதரிசனமே செய்தால்,
மானிலத்தார் வியக்கின்ற அழகு நாளும்
வளர்ந்திடுமே!' என்ற தந்த வானரந்தான்.
இதைக்கேட்ட தோட்டத்துக் காவற்காரன்
இடி முழக்கம் போன்ற தொரு
சிரிப்புச் செய்தே,
'மதிமிக்க குரங்காரே உனக்கே இந்த
மந்திரத்தை யார்கற்றுக் கொடுத்தார்?'
என்றான்.
விதி நம்பி வாழ்கின்ற தமிழ் நாடு
வீரர் சொன்ன மந்திரந்தான்!
அயலான் போல
இதையறியா திருக்கின்றாய் நீதான் என்றான்,
எனக்கிது பேராச்சரியம்!' எனச்
சொல் லிற்று.
'விந்தையிதை யானறியேன்; என்றன்
நாட்டார்
விளம்பியதா இக்கருத்து? வேண்டுமென்றே
நிந்தையுரை கூறுகின்றாய்; எங்கள் மீது
நினக்கென்ன பகை?' என்றான்.
'ஐயோ, பாவம்!
மொந்தைமுகம் வாய்ந்தாள்—உன்
எஜமான் பெற்ற
மூத்தமகள், பஞ்சாங்கம் பார்த்துப்
பார்த்தே
இந்தவிதம் செய்கின்றாள், அதோபார்!
அன்னாள்
எழில் பெற்றால், என் முகமும்
திருந்திடாதோ?'
இது கேட்டான்; எசமானின் மகளின்
போக்கும்
இசைத் தமிழர் வழக்கமதாய்க்
கொண்ட போக்கும்
மதியற்ற ஒரு குரங்கால் இகழப் பட்ட
வருத்தத்தால் மனதினிலே கோபம் மூளக்,
கதிகலங்க அடித்ததனில் உயிரைப் போக்கக்
கையிலொரு தடியெடுத்தான். குரங்
கதிர்ந்தே,
'புதியஉளம் பெற்றிடுவாய்; பஞ்சாங்கத்தைப்
போற்று மட்டும் இழிவதுலா'
-தென்றோடிற்றே!

## காமராஜரின் தேர்தல்

14-ம் பக்கத் தொடர்ச்சி

வர் போல், முன்னுக்குப் பின் முரணாகக் குழப்பிக் குழப்பிக் கூறியிருப்பதைக் காணும்போது காமராஜருக்கும் அவர் சகாக்களுக்கும் தேர்தல் சுரம் சற்று வேகமாகத் தாக்கியிருப்பது புலனாகிறது.

"உலக முழுதும் ஒன்றுபட வேண்டுமென்ற தத்துவம் வளர்ந்து வரும் சமயத்தில், நாட்டை மேலும் துண்டாட வேண்டுமென்று திராவிட கழகத்தார் இங்கு பிரசாரம் செய்து வருகிறார்கள். நாடு பிரிக்கப்பட்டதால் நமக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் போதும்" எனக் காமராஜர் 'கர்ஜிக்கிறார்'!

ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளைக் கொண்ட இந்தியதுணைக்கண்டத்தை ஓரே நாடாக்கித் துப்பாக்கி முனையில் ஆண்டுவந்தார்கள் ஆங்கிலேயர்கள். அந்த ஏகாதிபத்ய அமைப்பை அழித்துவிட்டு, அந்தந்த நாட்டுக்குரிய இனமக்கள் தனியரசுகள் ஏற்படுத்திக்கொள்வதே சிறந்த முறை என்று செப்பினால் அதற்கு, நாட்டைத்துண்டாடுவதா? பாரதமாதாவை வெட்டுவதா? மகாபாபமாச்சே என்றெல்லாம் முன்னர், காங்கிரஸ்காரர்கள் கூறிவந்தனர். இப்போது பாகிஸ்தான் பிரிந்ததற்குப் பிறகு, தனியரசு கோருமக்கட்குப் பாகிஸ்தான் பிரிந்ததனால் ஏற்பட்ட விபரீதங்களை யெடுத்துச் சொல்லிக் குழப்பி வருகிறார்கள். நாட்டைத் துண்டாடுவதுகூடாது எனக்கூறுகிறார். துண்டார்டுவது என்ற சொல்லைத் துணையாகக்கொண்டு எத்தனை நாட்களுக்குப்பிரிவினைக்கிளர்ச்சியை அடக்கிவிடமுடியும் என்று காமராஜர் எண்ணுகிறாரோ, அறியோம்! நாம் ஒரு கண்டத்தை அதனதன் இன கலாச்சாரப்படி பொருளாதார முறை சீர்படும் வகையில் சிறு சிறு நாடுகளாகத் துண்டாடச் சொல்லுகிறோமே யொழிய, நாட்டையல்ல. துண்டாடுவது, துண்டாடுவது என்று காமராஜர் கூறுகிறாரே, துண்டாடித் தனியாக எடுத்துக்கொண்டுபோய்விடுவதற்கு நாடு ஒரு கத்திரிக்காயா என்ன?

இயற்கை வளங்கள் எல்லாம் பெற்றும், திராவிடம் இன்று இழிநிலையிலிருக்கிறது, காரணம், திராவிடத்தின் நலனைப்பற்றிய நாட்டமில்லாத வடவர் ஆட்சியின்கீழ் திராவிடம் சிக்குண்டிருப்பதால்தான். ஆகவேதான் திராவிடம் தனியாட்சி பெற வேண்டும் என்று கூறுகிறோம். உலக முழுவதும் ஒன்றுபட வேண்டுமென்ற தத்துவம், திராவிடம் தன்னாட்சி பெறுவதனால் எந்த வகையிலாவது தடைபட்டுப் போய்விடுமா என்று 'எல்லாம் அறிந்த' தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் காமராஜரைக் கேட்கிறோம். உலகமுழுதும் ஒன்றுபடவேண்டுமென்றுதான் திராவிடர் கழகமும் கருதுகிறது. அதாவது ஒருநாடு, மற்றொரு நாட்டைச்சுரண்டாமல் அடிமைப்படுத்தாமல், ஆக்கிரமிப்புக்கு அடிகோலாமல் உலக முழுதிலுமுள்ள நாடுகள் ஒன்றுக்கொன்று நல்லெண்ணம், ஒற்றுமை, சம நோக்கத்துடன் வாழவேண்டுமென்றுதான் திராவிடர்கழகம் கூறுகிறது. ஆனால் அதற்காக உலக முழுவதிலுமுள்ள சிலபல நாடுகள் ஓரே ஆட்சியின் கீழ் இருக்கவேண்டுமா? அப்படி ஓரே ஆட்சியிலிருந்தால் ஒன்றுபட்டு விடுமென்று காமராஜர் கருதுகிறாரா? ஹிட்லர் கூடத்தான் உலக முழுவதும் ஒன்றாக்கித் தன் ஆட்சியில் வைத்துக்கொள்ள வேண்டுமென்றெண்ணிப் போரை ஆரம்பித்தார். ஏன், இப்போது டாலர் அமெரிக்காவும் உலக முழுதும் தன் ஆதிக்கத்தில் கொண்டு வரத்தான் திட்டமிடுகிறது. காமராஜர், இதுபோன்ற நிலையிலே தான் உலகம் ஒன்றுபட வேண்டுமென்று கருதுகிறாரா? விடுதலைப் போராட்ட காலத்திலே, வெள்ளையர்கள், நாங்களும் உலக முழுதும் ஒன்றுபட வேண்டுமென்று தான், ஒவ்வொரு நாடாக எங்கள் ஆதிக்கத்தைப் பரப்பி வருகிறோம், ஆகவே இப்போது நீங்கள் சுயராஜ்யம் கேட்டு, இந்தியாவை எங்கள் ஆதிக்கத்தினின்றும் துண்டாடிவிடாதீர்கள், என்று கூறியிருந்தால், காமராஜரும், அவரது சாகாக்களும் சரி என்று ஒப்புக்கொண்டிருப்பார்களா?

"நாடு பிரிக்கப்பட்டதால் நமக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் போதும்" எனக் கூறுகிறார். நாம் இந்த இடத்தில் ஒன்றுகூற விரும்புகிறோம். பாகிஸ்தான் பிரிவினை உணர்ச்சி மதவெறியாக மாறும் அளவிற்கு பிரிவினையைத் தள்ளிப் போட்டுக்கொண்டு வந்ததுதான் ஏற்பட்ட கஷ்டங்களுக்குக் காரணம். திராவிடர் கழகம் அந்த அடிப்படையில் நாடு பிரியவேண்டுமென்று கூறவில்லை. காமராஜர் சரித்திரம் படித்திருப்பாரென்றே நாம்கருதுகிறோம். மறந்திருந்தால் மீண்டும் புரட்டிப் பார்க்கட்டும். சமூகம் — பொருளாதாரம்—அரசியல் ஆகிய விவகாரங்களிலே வடநாடும்—தென்னாடும் வேறு பிரிந்திருப்பதை என்றும் காணலாம். இங்கு பிரிவினை கேட்பதற்கு மதம் அல்ல அடிப்படை; அறிவேதான் அடிப்படையாக விளங்குகிறது. ஆகவே, எல்லைத் தகராறுகளாலேற்படும்தொல்லையோ, அல்லது மற்றப் பிரதேசத்தாருடன் சண்டையோ, ஏதும் ஏற்படவழியில்லை என்பதைக் காமராஜருக்குக் கழகம் அடிக்கடி அறிவுறுத்தி வந்தும், அவரால் அறிந்துகொள்ள முடியவில்லை!

திராவிடம் தனியாகப் பிரிந்தால், வடநாட்டுக்கு வேறு மார்க்கெட் கிடைக்காதே, சுரண்டலுக்கும், ஆதிக்கத்திற்கும் ஆபத்து வந்துவிடுமே, தங்கள் கொள்ளை கோலாகல வாழ்வுக்குக் குழி தோண்டப்படுமே, என்ற எண்ணத்தில் வடநாட்டுத் தலைவர்கள் தான் பிரிவினையை எதிர்க்கின்றனரென்றால், திராவிடத்தைச் சேர்ந்த காமராஜர்கள் ஏன் அவர்கட்கு வக்காலத்து வாங்க வேண்டும்?

(5-ம் பக்கம் பார்க்க)

---

16-ம் பக்கத் தொடர்ச்சி

உருவச் சிலை. ஒவ்வொரு ஆண்டும் ஒன்றுகூடிப் போற்றுகிறார்கள் அந்த உன்னத உயிர்த் தியாகியை. ஆம் அந்நாட்டின் அறிவுக்கு அடிப்படையான பேச்சு, எழுத்து உரிமைகளுக்கு விதைபோட்ட வீரனைக் கொண்டாடாமல் என்ன செய்வார்கள் விடுதலைஆர்வங்கொண்ட மக்கள்!

அழியாப் புகழ் பெற்ற டோலட் உயிர்விடும் சமயம், கடைசியாகத் தனது நாட்டிற்கு விடுத்த மனம் உருகும் மெய் மொழிகள் இரண்டு. அவை,

"எனக்காக நான் ஏதும் வருந்தவில்லை. ஆனால் விஷயங்களை விளக்கமாக அறிய அறிவு பெறாது அறியாமையில் ஆழ்ந்து கிடக்கும் எனது இன்ப மக்களுக்காகவே என் நெஞ்சம் துடிக்கிறது."

# மூடநம்பிக்கை

ஒருகாலம் இருந்தது, மூடப் பழக்க வழக்கங்கள் உலகெங்கும் தம் ஆதிக்கத்தைச் செலுத்திய காலம். விஞ்ஞான அறிவு விரிவடைவதற்குமுன், உலகம் முழுவதுமே அஞ்ஞான அறிவால் மூடநம்பிக்கைகள் பலவற்றை உலவவிட்டு உண்மையை உணர முடியாமல் ஊசலாடிக்கொண்டுதான் இருந்தன. மக்களின் முயற்சியால் அறிவுவளர்ச்சியடைந்து, விஞ்ஞானத்தெளிவு படிப்படியாக உண்டாகத் தொடங்கவே, மேல்நாடுகளிலெல்லாம் இந்த மூடநம்பிக்கையும் படிப்படியாகக் குறையத் தொடங்கி விட்டது. ஆனால் இங்கே, 'நமது புண்யபூமியில்' மட்டும் இந்த மூடநம்பிக்கை எந்த விஞ்ஞானத்தைக்கண்டும் அஞ்சாமல்நிலைபெற்று நிற்கக் காண்கிறோம்! அதற்குக் காரணம் என்ன? மூடநம்பிக்கையைக் கண்டு விஞ்ஞானம் அஞ்சுகிறதா? இல்லை. நம் நாட்டிலுள்ள 'மூதறிவாளர்கள்' சிலர் மூடநம்பிக்கையை ஒரு கரத்திலும், விஞ்ஞானத்தை ஒரு கரத்திலும் தாங்கிக்கொண்டு, புராணக் கூற்றுப்படி (நாம் நம்புவதில்லை) திரிசங்கு சுவர்க்கமாக இருப்பதே இதற்குக் காரணமாகும். ஒரு அரசாங்க அலுவலகத்தில் வேலைபார்க்கும் ஒருவர், தாம் சரியாக ஒன்பது மணிக்கு அலுவலகம் போகவேண்டுமென்பதற்காகக், கையில் விஞ்ஞான முறையில் செய்யப்பட்ட ஒரு கடிகாரத்தைக் கட்டிவைத்துக் கொள்வார். அதே சமயத்தில் ஒன்பது மணிக்கு இராகுகாலம்—இயமகண்டம் பார்ப்பதற்காகப் பஞ்சாங்கமும் ஒன்று வைத்துக்கொள்வார். கடிகாரத்திலும் மணி ஒன்பதாகி, இராகுகாலம்—இயமகண்டமும் இல்லாமல், ஆபீசர் புறப்படுகிறார் என்று வைத்துக் கொள்வோம். புறப்பட்டவுடனே எதிரே ஒற்றைப்பார்ப்பானோ, இரட்டைச் சூத்திரனோ, எண்ணெய்க் குடமோ வந்தாலோ அல்லது பூனையோ பாம்போ குறுக்காகவோ வலமாகவோ போனாலோ, போதும், அவ்வளவுதான், ஆபீசர் திரும்பி விடுவார் வீட்டுக்கு. பிறகு சிறிது நேரம் பொறுத்துத்தான் ஆபீசுக்குப்போவார். ஏன் இவ்வளவு நேரம் பொறுத்து வந்தீர் என்று கேட்பதற்கு ஆள் இல்லை ஆபீசில்! அவரேதான் அவரைக் கேட்கவேண்டும்!

அதே ஆபீசில், அவருக்குக் கீழ் வேலைசெய்யும் ஒருவர் யாது காரணத்தாலோ சிறிது நேரம் பொறுத்து வந்துவிட்டாலோ, "என்னப்பா! எப்ப பார்த்தாலும் இப்படி லேட்டாக வந்துகொண்டிருக்கிறாய், இப்படிவந்தா இனி இங்கே உனக்குச் சரிப்படாது" என்று கண்டிப்பாகப் பேசுவார். அதற்கு அந்தத் தொழிலாளி, "ஐயா, நான் சரியான நேரத்துக்குத்தான் புறப்பட்டேன் ஆனால் புறப்பட்டு இரண்டடி எடுத்துவைப்பதற்குள் ஒரு பூனை குறுக்கே போச்சுது சார், அதனாலே ......" என்று முடிப்பதற்குள் ஆபீசர், "பூனை குறுக்கே போச்சு, அதனாலே ஆபீசுக்குவர நேரமாய் விட்டது என்று சொன்னால் யாராவது ஒத்துக்கொள்வார்களா? இன்றைக்குத்தான் பூனை குறுக்கே போச்சு. நேற்றுக்கூட நீர் லேட்டாகத்தானே வந்தீர்; அதற்கென்ன காரணம்?" "நேற்று ஒன்பது—பத்தரை இராகு காலம், அதனாலேதான் லேட்டு." இதனைக் கேட்ட அந்த ஆபீசர், அந்தத் தொழிலாளியை நோக்கி, "இப்படிப்பட்ட காரணங்களுக்காக ஆபீசுக்கு வருவதில் நீர் தாமதம் செய்வதால், உம்முடைய கணக்கைத் தீர்த்துக்கொண்டு இந்த ஆபீசிலிருந்து விலகிவிடும்" என்று கட்டளை பிறப்பிக்கிறார். ஆனால் அந்த ஆபீசர் மட்டும் அதே ஆபிசில், ஆண்டவன் அமைத்த மூடநம்பிக்கையின் அணைப்பிலும், அறிவாளி அமைத்த விஞ்ஞானத்தின் அணைப்பிலும் இருந்துகொண்டு அலுவல் பார்த்த வண்ணம்தான் இருக்கிறார். இவை படித்தவர்களிடையே காணப்படும் மூடநம்பிக்கைகள் பலவற்றுள் சில. இதுபோலவே படிப்பற்ற பாமர மக்களிடமும் பலவிதமான மூடநம்பிக்கைகள் குடிகொண்டுள்ளன. அவற்றுள்ளும் சிலவற்றை இங்கு விளக்கிக் காட்டுவாம்.

நமது நாட்டில் கரும்பு விற்கும் இடங்களில் கரும்பு உடைக்கும் பந்தயம் ஒன்று நடந்துவருவதைக் காணலாம். அதாவது ஒருவன் நூறுகரும்பைத் தன் கைமேல் வைத்து அடித்து உடைத்து விடுகிறான் என்பது. ஆனால் நம்மைப் போன்றவர்களோ ஒரு கரும்பைக் கூட உடைக்கப் பயப்படுகிறார்கள். இந்த நம்முடைய பயமானது நூறு கரும்பை உடைப்பவனுக்குத் தெய்வீகத் தன்மையை உண்டாக்கி விடுகிறது. ஆனால், இது தெய்வீகமா என்பதை நாம் தீர யோசித்துப் பார்ப்பதில்லை. அவன் அவ்விதம் உடைத்து உடைத்துப் பழக்கப்பட்டவன் என்பதையும் எண்ணிப்பார்ப்பதில்லை. நீங்களும் நாங்களும் அந்தப் பழக்கத்தை மேற்கொண்டால் நூறல்ல, இருநூறு கரும்பைக்கூட உடைத்தெறியலாமே என்ற தைரியத்தையும் கொள்வதில்லை.

பிச்சையெடுக்கும் சிறு குழந்தைகள் தங்களுடைய வயிற்றைப் படீர் படீர் எனத் தங்கள் கையால் அறைந்து கொள்கின்றன. அவ்விதம் நம்முடைய குழந்தைகள்செய்து கொண்டால் சுருண்டு கீழேவிழுந்து விடும். பிச்சையெடுக்கும் குழந்தைகள் இவ்விதம் அறைந்துகொள்வதால் அவர்களிடம் தெய்வீகம்இருக்கிறது என்று பொருளா? தெய்வீகம் அவர்களுக்கிருந்தால், அவர்கள்ஏன் வயிற்றில் அறைந்து பிச்சைவாங்க வேண்டும்? பழக்கத்தின் காரணமாகவே இவ்விதமெல்லாம் செய்யப்படுகின்றனவென்பதை உணரமாட்டாத கருத்துரையர்கள் மிகுதியாக இருக்கும்வரையில் இவையெல்லாம் தெய்வீகமாகத்தான் கருதப்படும் போலும்! தேங்காயைத் தலையில்

தட்டி உடைக்கிற பழக்கத்தைக் கூடத் தெய்வீகம் என்றுதான் இங்கே சொல்லுகிறார்கள். அந்த அளவுக்குத் தெளிவற்ற தன்மை இங்கு வளர்ந்திருக்கிறது.

நவீன ஞானப்படி இத்தியாதி மூடநம்பிக்கைகளை விசாரித்து விளக்கியுள்ள நூல்கள் ஆங்கிலத்தில் பலவுள. அவைகளில் முக்கியமானவை “Taylors Anthropology” என்றும் “Frazors Golden Bough” என்றும் இரண்டு சிறந்த நூல்கள் உள. அவைகளைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதவேண்டிய அவசியத்தை நமது சுயமரியாதைக்காரர்கள் அறிந்து நடக்கவேண்டும். பாமர மக்கள் மூடநம்பிக்கைகளை ஒழிக்கவேண்டுமாயின் அம்மூட நம்பிக்கைகளின் ஆதாரத்தைவிசாரித்து அறிதல் வேண்டும். அவ்வித விசாரணைக்கு மேற்போந்த நூல்கள் இன்றியமையாதவையாகும். இத்தியாதி நவீன ஞானத்தைப் பாமர மக்களுக்குப் புகட்ட எத்தனிக்கையில் புராணங்களையும், கேவல நாடகங்களையும், எடுத்து அச்சிடுவதால் பயன் என்ன? மெஞ்ஞான முறைப்படி சிற்சில மூடப்பழக்கங்களை ஈங்கு எடுத்துரைப்போம்.

நமது தமிழ் நாட்டில் மிகுதியாகப் பாமர மக்களிடத்து ஒரு மூடப்பழக்கம் அனுதினமும் பார்க்கின்றோம். அது யாதெனில் இறந்தவர்களைச் சுடலைக்குக் கொண்டு போகும்போது அதிக சத்தத்தோடு கொண்டுபோகும் பழக்கம். இதனுடைய ஆதாரத்தைக் கண்டுகொள்ளாமல் இது பெரும் பழக்கமாகத் தென்னாட்டில் நடந்தேறி வருகிறது. இது விசேஷமாகத் தாழ்த்தப்பட்டோர் எனக் கூறும் வகுப்பாரிடம் பெரிதும் காணலாம். உயர் குலத்தோர் என்று கூறும் பிராமண வைசியர்களில் சாவு மேளத்தைக் கேட்பதரிது. ஐரோப்பா அமெரிக்கா முதலிய நாகரிக் நாடுகளில் சேனைத் தலைவர்களுக்குத் தவிர மற்றவர்கள் சாவுக்கு மேளம் அடிப்பதில்லை. ஆனால் இந்தப் பழக்கம் காட்டுமிராண்டிகளிடம் (Savage Tribes) அதிமாகக் காணலாம். இந்தப் பழக்கத்தின் காரணத்தை அறிய வேண்டுமானால் காட்டுமிராண்டிகள் எண்ணியுள்ள எண்ணத்தை விசாரித்தால் தெரியவரும். அவர்களுக்குள் இறந்தவனைப்பற்றி இரண்டு மூடநம்பிக்கைகள் உண்டு. அவை யாவன:— அவர்களில் இறந்த மனிதனுடையஉயிர், ஆவி, (Spirit, Soul) உடலைவிட்டு நீங்கியதும் அருகாமையிலுள்ள செடியிலோ, விருட்சத்திலோ, ஜலத்திலோ ஒளிந்து நிற்குமாம்! அந்த ‘ஆன்மா’ உயிருடன் இருப்பவர்களைத் தொந்தரவுசெய்யுமாம்!! ஆதலின் அதனைச் சத்தமிட்டும், இரைச்சலிட்டும், கூச்சல்போட்டும், வாத்தியங்களால் பேரொலியை உண்டாக்கி அந்தஆன்மாவைப் பயப்படச் செய்து ஓடச்செய்வதற்கு ஏற்பட்டதப்பட்டை,பேரி,சங்குமுதலிய வாத்தியங்கள் முழங்கச் செய்யும் பழக்கத்தின் காரணமாகும். இரைச்சல் அதிகமிட, அதிகமிட இறந்தவனுடைய ‘ஆன்மா’ அதிக விரைவாக ஓடிவிடுமாம்! இந்தக் காட்டுமிராண்டி மூடப் பழக்கத்தை நமது தமிழ் மக்களும் அனுசரித்து வருகின்றார்கள். நமது நாடுகளில் சாவு மேளங்களின் காரணம் ஆதிகாலக் காட்டுமிராண்டிகளாக இருந்துவந்த நமது மூதாதைகளின் உத்தேசங்களென அறியவும். சாவு மேளங்களுக்கு ஆதாரம் காட்டுமிராண்டிப்பழக்கமாகஇருக்க, இதற்கு தற்காலம் வேறுவித அர்த்தங்களும், வியாக்கியானங்களும் கொடுக்கின்றார்கள். அரசர் இறந்தாலும், சேனைத் தலைவர் இறந்தாலும் சாவு மேளம் அதிகமாக உபயோகிக்கின்றார்கள். நமது நாட்டில் எளியவன் இறந்தால் ஒன்றிரண்டு சங்குடன் போகின்றது. அரசர்கள், தனவந்தர்கள் இறந்தால் ஊரிலுள்ள வாத்தியங்கள் எல்லாம் முழங்கும்! ஏன்? எளியவனுடைய ‘ஆன்மா’வோ பலத்த சத்தத்தால்தான் ஓட்ட முடியுமாம்!! இந்த எண்ணங்கள்தான் சாவு மேளங்களுக்கு அடிப்படையாக உள்ளன. இறந்தவனை வாத்தியக் கோஷ்டியாலும் மரியாதை செய்வதென்பது பிறகு கொடுத்து வரும் வியாக்யானமென அறிக. எதார்த்தமோ செத்தவன் ‘உயிர்’ திரும்பவும் வரவொட்டாமல் செய்வதற்கு ஏற்பட்ட மேள வாத்தியங்களென அறிக. காட்டுமிராண்டிப் பழக்கங்களில் சிலவற்றை இன்னும் உயர்மக்கள் என்று கூறும் பிராமணர்களிடமும் காணலாம். பிராமணர்களிடம் ஒரு துர்ப்பழக்கம் இருந்துவருகின்றது. அதாவது இறந்தவனைச் சாதாரண வாசல் வழியாகக் கொண்டுபோகாமல் சுவரில் துவாரம் செய்து, சவத்தை அவ்வழியாக எடுத்துக்கொண்டு போன பிறகு அந்தத் துவாரத்தை அடைத்துவிடுவார்கள். இதுவும் காட்டுமிராண்டிப் பழக்கங்களில் ஒன்று. இந்தப் பழக்கத்திற்கு காட்டுமிராண்டிகள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், பழைய வழியாகப் போனவன் இறந்தால் அவன் “ஆன்மா” அந்த வழியே திரும்ப வந்து விடுமாம்! புதிய துவாரத்தின் வழியை எடுத்துவிட்டு, அந்தத் துவாரத்தை அடைத்துவிட்டால், அந்த “ஆன்மா”வுக்குப் புது வழி தெரியாமையால் அது அந்தப் புது வழியில் நுழையாமல் தடுத்துவிடப்படுமாம்? செத்தவன் ஆன்மாவை ஏமாறச் செய்யும் சூழ்ச்சிகளில் இது ஒன்று. இன்னும் பல மூடச் சூழ்ச்சிகளைக் கொண்டு “ஆன்மாவை” மயங்கச்செய்து விடுகின்றார்கள். இறந்தவனை வீட்டை விட்டுச் சுடுகாட்டுக்குக் கொண்டுபோகையில் சாணிச்சட்டியை உடைக்கின்றார்கள். இதுவும் காட்டு மிராண்டிகளின் மூடப் பழக்கத்தை அனுசரித்து நடப்பதாகும். காட்டுமிராண்டிகளுக்குள் ஒரு கற்பனையுண்டு. அதாவது, பேய், பிசாசுகள் தண்ணீரைத் தாண்டாவாம்! தண்ணீரிலும், சாணித் தண்ணீர் விசேஷம். சவத்தின் பின் ஊற்றினால் அதன் ஆன்மா, தெளித்த தண்ணீரைத் தாண்டாவென்று எண்ணி இந்தப் பழக்கம் நாளைக்கும் நம்மவர் செய்து வருகின்றனர். கொள்ளிவைத்தவர்கள் சுடுகாட்டை விட்டு வீட்டுக்குத் திரும்பும்போது கடலிலாகிலும், குளத்திலாகிலும், ஆற்றிலாகிலும் நீரில் காலை நனைக்க வேண்டுமென்ற பழக்கம் இதனால் ஏற்பட்டதென அறியவும். இவர்கள் காலடி தண்ணீரில் மறைந்துபோகுமாதலால் செத்தவன் “ஆன்மா”வும் காலடிவைத்த பின் தொடர்வதற்கில்லையாம்! திருடர்களும் தங்கள் காலடிகளைத் தண்ணீரில் இறங்கி மறைத்து விடுவதைப் போன்றதென அறிக. திருடர்களைப் பின்தொடர்ந்த நாய்கள், அங்குவந்து மயங்குவதைப் போல், “ஆன்மா”வும் மயங்கிவிடுமாம்! கொள்ளிவைத்தவர்கள், எரியும் சவத்தைத் திரும்பிப்பார்க்க

(13-ம் பக்கம் பார்க்க)

## காமராஜர் தேர்தல் கீதம்!

2-ம் பக்கத் தொடர்ச்சி

மேலும் கூறுகையில், "நமக்கு உணவுமட்டும் இருந்தால்போதுமா? சுதந்தரம் இல்லாமல் நாம் சந்தோஷமாக இருக்கமுடியாது" என்கிறார், நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். இன்றைய ஆட்சியிலே, நமக்கு அதாவது எதிர்கட்சிக்காரர்கட்குக் கூட அல்ல, பாமர ஏழை மக்கட்குக் கூட அல்ல, காங்கிரஸ்காரர்கட்கே, அதுவும் காமராஜர் போன்ற தலைவர்கட்கே சுதந்தரம் இருக்கிறதா? இருக்கிறதென்று அவர்தான் கூறமுடியுமா? கூறுவாரா? மாகாண மந்திரிசபைத் தகராறு முதல், உணவு, உடைப் பிரச்சினைவரை எதுவாயிருந்தாலும் மத்திய சர்க்காரிடம் காவடி தூக்க வேண்டிய நிலையிலே தானிருக்கிறார் இன்றும் காமராஜர். ஒரு சிறிய திட்டமாயிருந்தாலும், அதற்கு மாகாண சட்டசபையில் பெருவாரியான ஆதரவிருந்தாலுங்கூட, அது டில்லி முத்திரையைப் பெற்றால்தானே சட்டமாக முடிகிறது. ஆகவே இந்த இழிநிலையைப் போக்கிக்கொள்ள வேண்டாமா? காமராஜர் பேச்சுப்படியே, காமராஜர், சுதந்தரமாகவும், மகிழ்ச்சியாகவும், வாழவேண்டுமானால், அதற்கும் வடவர் ஆட்சி நீங்கிய திராவிடத் தனியாட்சி ஏற்படவேண்டிய அவசியம் உண்டாகிறது என்பதனைக் காமராஜர் உணரவேண்டும். உணர்ந்தால் காமராஜர் ஆசை நிறைவேறும்.

"குழப்ப வேலைகளி லீடுபடுவதை விட்டு, தேர்தலில் நின்று அவர்கள் ஜெயிக்கட்டும். பொதுமக்கள் ஆதரவு கிடைத்தால் கோயில்களை இடிக்கட்டும். ஹிந்திப் புத்தகங்களைக் கொளுத்தட்டும்" எனப்பேசியிருக்கிறார்.

இன்று நாட்டிலே குழப்பத்தை உண்டுபண்ணுகிறவர்கள் காங்கிரஸ்காரர்களா? அல்லது திராவிடர் கழகத்தார்களா என்பது பொதுமக்கட்கு நன்கு தெரியும். ஓரே வார்த்தையில் கூறவேண்டுமானால், குழப்பத்தை உண்டுபண்ணியவர்கள், கட்டிடங்களை (புத்தகங்களோடு) கொளுத்தியவர்கள், தண்டவாளத்தைப் பெயர்த்தவர்கள், தந்திக்கம்பியை அறுத்தவர்கள், காங்கிரஸ்காரர்களும் காமராஜர் சாகாக்களுமல்லவா? 1942-ல் ஆகஸ்டுப் 'புரட்சி' செய்து தான் ஆனந்த சுதந்தரம் பெற்றோமென்று அடிக்கடி காமராஜர் கூறிவருகிறாரே. அதற்குள்ளாக மறந்துவிட்டாரா? தன்னிலை மறந்து தடுமாறுகிறாரா தமிழ்நாட்டுக் காங்கிரசின் தனிப்பெருந் தலைவர்? கோயிலை இடிப்பது எங்கள் திட்டம் என்று திராவிடர் கழகம் என்றாவது கூறியிருக்கிறதா? இலட்சக் கணக்கான ரூபாய்களைச் செலவிட்டுக் கட்டிய கோயில்களை இடித்துவிடுவதால், பொதுவாக நஷ்டமே ஒழிய லாபமே அல்ல என்பதைத், தண்டவாளத்தைப் பெயர்த்துத், தந்திகம்பிகளை அறுத்து, மக்களுக்கு நஷ்டத்தையும், கஷ்டத்தையுமளித்த காங்கிரஸ்காரர்களைவிடக், கழகத்தார் நன்குணர்ந்திருக்கின்றனர். நாட்டிலே அறியாமையும், பஞ்சமும் வேலையில்லாத்திண்டாட்டமும், தாண்டவமாடிக்கொண்டிருக்கும் நேரத்திலே, பள்ளிக்கூடங்களையோ, தொழிற்சாலைகளையோ கட்டி அறியாமையையும், வறுமையையும் போக்குவதைவிடுத்து, கோயில் கட்டிக் கும்பாஷேகம், செய்யக்கோடிக்கணக்கில் வாரி இறைப்பானேன்? கோயில்களை விபசாரவிடுதியாக ஆக்குவானேன்? கள்ளர்களின் குகையாக அமைப்பானேன்? ஆகவேபாழடைந்திருக்கும் பலபெரிய கோயில்களில் தொழிற்சாலைகளையும், கல்விச்சாலைகளையும், அமைத்துக்கொள்ளலாம், அதுமட்டுமல்ல, இன்னும் இருக்க இடமின்றி ஏங்கித் தவிக்கும் எண்ணற்ற ஏழைமக்கட்கு இல்லங்கள் அமைத்துத் தரலாம் என்றுதான் கழகம் கூறுகிறதேயொழிய, காமராஜர் அறியாது கூறுவதுபோன்று, இடிக்க வேண்டுமென்றல்ல, என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

"பொதுமக்கள் ஆதரவிருந்தால் இந்திப் புத்தகங்களைக் கொளுத்தட்டும்" எனக்கூறுகிறார்.

வெள்ளை ஆட்சியிலே, மில் துணி பகிஷ்காரத்துக்காக, சுதேசித்துணிகளைக்கொளுத்திய வீரர்களல்லவா காமராஜர் கூட்டத்தார்! இதனை மறந்துவிட்டாரா காமராஜர்? அச்செய்கை அன்றும், ஏன் இன்றும், தேசபக்தியாகக் கருதப்படுகிறதே! அப்படியிருக்க, தமிழர்கள்மீது கட்டாயமாகத் திணிக்கப்படும் அன்னிய மொழியாகிய இந்தியைப் பகிஷ்கரிக்கிறோம் என்பதற்கு அறிகுறியாக, ஒருசில இடங்களில், மாணவர்கள் இந்திப் புத்தகங்களைக் கொளுத்தினார்களென்றால், அதிலென்ன தவறு? அந்நியத்துணி பகிஷ்காரத்துக்காக அதைக்கொளுத்துவது தேசபக்தியாகப் போற்றப்படும்போது, அந்நிய மொழிப்பகிஷ்காரத்துக்காக அப்புத்தகங்களை அதுவும் சில மாணவர்கள் கொளுத்தினால் அதுமட்டும் தூற்றப்படுவானேன்? அழுகிப்போனதை அப்புறப்படுத்தித்தானே ஆகவேண்டும். உளுத்துப்போனதை உதறித்தள்ளித்தானே ஆகவேண்டும். அழகானபழமாச்சே என்பதற்காக அழுகலைத்தின்னக் காமராஜர் ஒப்புவாரா? அதேபோன்று புராணக்குப்பைகளையும், தமிழர் பண்பாட்டிற்கு முரணான பழங்குப்பை நூல்களையும், தமிழர்களைத் தாழ்வுபடுத்தும் நூல்களையும், கொளுத்துவதால்சுயநலமிகளுக்கல்லது வேறு யாருக்கு என்ன நஷ்டம்? இப்பழங்குப்பைகளாலல்லவா திராவிடம் இன்று படுகுழியில் தள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, அதைத்துக்கொழுத்துவதால்என்ன கெடுதி? காமராஜர் கூறியபடியே, பொதுமக்கள் ஆதரவுடன், அப்புராணக்குப்பைகளைக்கொளுத்தக்கூடிய நாளும் வரத்தான் போகிறது. அந்நாளும் அண்மையில்தானிருக்கிறது என்பதனை அவர்கள் அறியட்டும்.

"இன்றைய நாட்டிற்குத் தேவை அமைதிதான். ஆகவே அமைதியைப் பாதுகாக்கப் பாடுபடும் காங்கிரசை ஆதரியுங்கள்" எனக் கூறியிருக்கிறார்.

நாட்டிற்கு அமைதி தேவைதான் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் எப்படிப்பட்ட அமைதி தேவை? எப்படி அமைதி நிலவும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? புண்ணின் வேதனை தாங்காமல் புலம்பும் குழந்தையிடம், பூச்சாண்டி காட்டி அழாதே என்றால் அழாமலிருக்குமா? அப்படியே அழாமலிருந்தாலும் சிறிதுநேரம் தானே. மறுபடியும் வலி ஆரம்பிக்கும்போது அழத்தானே செய்யும். புண்ணுக்கு மருந்திட்டுச் சிகிச்சை செய்தால்தானே, குழந்தை நிரந்தரமாய் அழாமலிருக்கும். அதேபோன்று, நாட்டிலே சமுதாய பொருளாதாரத் துறைகளில், எண்ணிப் பார்க்க முடியாத ஏற்றத்தாழ்வை வளரவிட்டுக்கொண்டு,

(12-ம் பக்கம் பார்க்க)

# அரசாங்க அறைகூவலுக்கு :: :: :: :: அன்பர்கள் தரும் பதில்

11—6—49

திராவிடநாடு ஆசிரியர் C. N. A. அவர்களுக்கு,

இன்று காலை 'திராவிடநாடு' பத்திரிகை ஜாமீன் ரூ. 3000. கோரப்பட்டது கண்டு திடுக்கிடவில்லை. ஏனெனில் ஆட்சிமன்றம் ஏறிய ஆட்சியாளர்கள் எந்த ஜனநாயகத்தின் சார்பாக நின்று குரலெடுத்துப் பேசினார்களோ அந்தஜனநாயகத்தை ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தவுடன் கொன்று சவமாக்கிவிட்டார்கள். அதற்குப் பதிலாக உலகத்தின்முன் கொல்லப்பட்டுப் புதை குழியில் தள்ளப்பட்ட பாஸிஸ்ட்பிணத்தைத்தோண்டிஎடுத்துக் கட்சிபீடத்தின் அலங்காரப் பதுமையாகக் கொடுத்து இருக்கிறார்கள். அந்தப்பிணத்தின், மூடை நாற்றத்தின் கடுமையான எதிரொலியின் ஒரு பகுதி இது. இதற்கெல்லாம் இந்திய ஜனநாயகம் சாய்ந்து விடாது. தடியாலும், வெடிகுண்டுகளாலும் தடை உத்தரவு, ஜாமீன்களினாலும் ஒடிந்து விழக்கூடியது எது என்பதை உலக வரலாறு தெளிவாக அறிவித்திருக்கிறது. ஆட்சிமன்றம் அதிகாரபோதையால் மறந்திருக்கலாம். காலத்தின் கடுமையான படிப்பினையை அரசாங்கம் உணரத் தவறாது. 'திராவிடநாடு' இடதுசாரிக்கொள்கைகளை உரத்த குரலெடுத்து பேசும் ஜனநாயகத்தின்குரல். புரையோடிப் போன சமுதாயத்தின் புண்ணை ரணசிகிச்சை செய்யும் ரணவைத்தியம். மதங்களின் கொடுமைகளால் பிணநடை போடும் மனிதனை, மனிதத்தன்மை இதுதான் என உணர்த்தும் அறிவுச்சுடர். உங்கள்மீது தாக்கப்படும் தாக்குதல்களைத்தாங்கத் தமிழ்மக்கள் தோள் கொடுத்து உதவுகிறார்கள். உங்களிடம் கோரப்பட்ட ஜாமீன் தொகைக்கு என்சிறு உதவி ரூ. 3-0-0 அனுப்பியிருக்கிறேன். மணியார்டர் நர் 4643. உலகத்தின் செம்பாதி சிவப்புடையில்காட்சியளிக்கிறது. தவிர, எந்தத்திசையிலிருந்து உலகம்ஒளிபெறுகிறதோ, அந்தத்திசை இரத்தமயமாக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கிரணங்கள்தான் இந்திய ஆட்சியாளர்களின் எதிர்காலத்தை கனவிலும், நினைவிலும் சூன்யமாக்குகின்றன. வீழ்ச்சியுறப் போகின்றவனின் வெறிச்செயல்கள் ஆரம்பமாகி விட்டன.

இப்படிக்கு,

**ர. ரா. ராமமூர்த்தி,**

மதுரை.

வாழ்க ஜனநாயகம்!
வாழ்க பேச்சுரிமை எழுத்துரிமை!!
வாழ்க சுதந்திரம்!! வாழ்க வையகம்!!!

✱

13—6—49

ஐயா!

தமிழர், குறைந்த கோரிக்கையையே வற்புறுத்தி பலாத்காரச் செயல்கள் எதற்கும் தூண்டாத அறிவுத் துறைத் தமிழர் இதழாம் நம் 'திராவிடநாடு' மீது பிணையம் கோரி, அரசியலார் தாக்கியதன்மீது தாங்கள் விடுத்த நன்கொடை வேண்டுகோளை முன்னிட்டு இச் சிறுதொகை ரூ. 20. அனுப்பியுள்ளேன். நாட்டு நலத்துக்காகச் சலியாது பாடுபடும் தாங்களும் திராவிடநாடும் நீடூழி வாழ்க. வாழ்க, தமிழ், தமிழர்.

இப்படிக்கு,

**அலமேலு.**

✱

15—6—49

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். "திராவிடநாடு" இதழுக்கு இன்றைய ஆளவந்தார்கள் கோரியுள்ள ரூ. 3000 ஜாமீன் கண்டு திடுக்கிட்டேன், உள்ளபடியே குடியரசுக் கோட்பாட்டில் நம்பிக்கைகொண்ட யாரும் அரசாங்கத்தின் அவசரப் போக்கை, எதேச்சாதிகாரத்தை, அடக்கு முறைக் கொடுமையைக் கண்டிக்காமலிருக்க முடியாது. கண்டிப்பது மட்டுமல்ல, சொல் வேறு செயல் வேறாக உள்ள அந்தச் சுயராஜ்யக் கட்சியார் நடத்தையைக் கண்டு கவலையுறாமலிருக்கவும் முடியாது.

பேச்சுரிமை, எழுத்துரிமை, மனிதன் பிறப்புரிமை என்று அடித்தொண்டையிலிருந்து கூவியும், மேஜை அதிரக் கர்ஜித்தும், பத்திரிகைகளில் பத்தி பத்தியாக எழுதியும், வெள்ளைய ஏகாதிபத்தியத்தின் பாசீசப் போக்கைக் கண்டித்தவர்கள், ஆட்சிப்பீடமேறியதும், ஆங்கிலேயனே நாணும் படியாகஅடக்குமுறைப்பாணங்களை அடிக்கடி அவிழ்த்துவிடும் காட்சிகளைநாம்காணும் போது, இந்த எதேச்சாதிகாரம் எந்த அளவிற்குச்செல்லுமோ என்பதை எண்ணும்போது, நல்லாட்சி மலர வேண்டும், நாடு செழிக்கவேண்டும், வாழ்க்கை வளமாகவேண்டும், என்று விரும்புகின்ற நமக்குக் கவலை தவிர வேறு என்ன இருக்கமுடியும்?

திராவிட வாலிபர்களில் குறிப்பாக மாணவர்களில் "திராவிடநாடு" இதழால், எவ்வளவு பயன் பெறுகிறார்கள் என்பது நாடறிந்த செய்தியாகும். அறிவு செறிந்த கட்டுரைகள், ஆணித்திறமான அரசியல் அபிப்பிராயங்கள், கருத்தோவியங்கள், காவியவர்ணனைகள், சிந்திக்கத் தூண்டும்சிறுகதைகள், வாழ்க்கைவரலாறுகள், மொழிப் போராட்ட சம்பவங்கள்—ஆகிய இன்னபிற கருத்துக்

(11-ம் பக்கம் பார்க்க)

# மவுண்ட்ரோட் பெருமானுக்கு அர்ச்சனைகள்!

அறிவையும், செய்கையையும் விற்பது!

அதிக வருமானம் அடைவது!

விளம்பரம் பல போடுவது!

கொள்ளை லாபம் அடிப்பது!

மாதம், மூன்று லட்சம் ரூபா விளம்பரத்தில் மட்டும் பெறுவது!

மக்களின் ஆதரவு என்றும் உண்டு என்று கனவு காண்பது!

விளம்பர வரி கொடுக்க மறுப்பது!

வற்புறுத்திக் கேட்டால் மிரட்டுவது!

சர்க்காரை என்றுமே ஆதரித்து வராதது!

சர்க்காரைக் கவிழ்க்க ஆசைப்படுவது!

சர்க்கார் கவிழ்ந்தால் ஆனந்தப்படுவது!

இந்த அர்ச்சனைகள் இப்பொழுது வழங்கப்பட்டுள்ளன. யாரால் யாருக்கு வழங்கப்பட்டுள்ளன? அறிய ஆவல் பிறக்கத்தானே செய்கிறது!

யாருக்கு இந்த அர்ச்சனைகள்? மீண்டும் கேட்கத் தூண்டுகிறது, அல்லவா! திராவிடர் கழகத்துக்கு இருக்குமோ? அதற்கு, மாதம் மூன்று லட்ச ரூபாய் விளம்பரத்தின் மூலம் வரும்படி ஏது! யாதேனும் கள்ளமார்க்கட் கொள்ளைக்காரர் ஸ்தாபனத்துக்கு வழங்கப்பட்டதாகுமோ? அத்தகைய ஸ்தாபனம்தான் வரி கொடுக்க மறுக்காதே! ஏதேனும் தொழிலாளர் கூட்டத்திற்கு 'அன்புடன்' அளித்த அர்ச்சனைகளோ? சர்க்காரை மிரட்டுவதால் தனக்கு ஏதும் பலன் கிடைக்காது என்பதைத்தான் அது நன்கு அறிந்திருக்கிறதே! பின் எதற்கு அளிக்கப்பட்ட அர்ச்சனைகள் இவை? பொறுங்கள், கூறிவிடுகிறேன். திருமாலின் சங்கு நடுவிடத்தும், யானையும், காமதேனுவும் இருபுறத்தும் அமைய, குறி தரித்துக் கொண்டு, நாள்தோறும், ஊர்தோறும், நாட்டில் வலம் வந்து கொண்டிருக்கும்; மாடி வீடுடையான்—மஞ்சள் சுவர்தானுடையான்—வழியிரண்டுடையான்—வண்ணக் கோல நலமுடையான்—நாறுங் கூவங் கரையகத்தான்—கூறிடும் விருந்து மாளிகை எதிருடையான்—ஊதும் சங்கு உள்ளுடையான்—சுற்றும் சக்கரப் பொறிகளுடையான்—மவுண்ட் ரோடு வாழ் பெம்மானாகிய 'இந்து'வுக்கு வழங்கப்படும் அர்ச்சனைகளே மேலே குறிக்கப்பட்டவை!

யார் இந்த அர்ச்சனைகளை வழங்குபவர்? கருப்புச் சட்டையினரா? இல்லை! செஞ்சட்டையினரா? இல்லை! இவர்களுக்கெல்லாம், பெம்மானை வழிபடும் 'பெரு வழக்கம்' இருந்ததில்லையே! கதருடை அணிந்து நாட்டைக் காத்துவரும் சென்னைப் பிரதமர் தோழர் பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்களே இவ்வர்ச்சனைகளை வாரியிறைத்திருக்கும் 'பக்தகோடி'யாவார்! நெல்லையம்பதியிலே நின்று, மவுண்ட்ரோடிலுள்ள 'இந்துப்' பெம்மானையும், அப்பெம்மானைச் சார்ந்து மவுண்ட்ரோடிலேயே வதிந்து வரும் சில உப பெருமாள்களையும் சேர்த்து 'அர்ச்சனை' புரிந்துள்ளார் பிரதமர் குமாரசாமி ராஜா.

பத்திரிகைகளில் வரும் விளம்பரங்களின்மீது, பத்துச் சத விகிதம் வரிவிதிக்கப் போவதாகச் சென்னை அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையின் பேரில், சென்னை மவுண்ட்ரோடிலுள்ள 'இந்து'ப் பத்திரிகை அலுவலகத்தில், பத்திரிகை முதலாளிகள் பலரும் கூடி, மந்திரிகள்—சட்டசபை அங்கத்தினர்கள் முதலியவர்களுடைய சொற்பொழிவுகளை, விளம்பர வரி விதிப்புக்கு எதிர் நடவடிக்கையாகத் தாங்கள் இனிப் பிரசுரிக்கப் போவதில்லை என்று அரசாங்கத்தை மிரட்டும் முறையில் அவர்கள் செய்த தீர்மானத்தை யாவரும் அறிவார்கள். அந்த மிரட்டல் தீர்மானத்திற்குவிடையிறுக்கும் முறையில்தான் நெல்லைப் பொதுக் கூட்டத்தில் பேசும்போது, பிரதமர் தோழர் ராஜா சற்று நெஞ்சுத் துணிவுடன் சில மொழிந்துள்ளார்.

பல்வேறு தொழில்களையும் முதலாளிகள் பலரும் கைப்பற்றிக் கொண்டு, அவ்வத் தொழிற் றுறைகளில் ஏகபோக வல்லரசாட்சி நடத்திக், கொள்ளை லாபத்தை ஏப்பமிட்டு வருவது போலவே, இங்கு பத்திரிகைத்தொழில்களைச் ஒரு சிறு கூட்டத்தார் கைப்பற்றிக் கொண்டு, நாளடைவில் பெரும் முதலாளிகளாகி, இன்று தனியாட்சி நடத்திக் கொண்டு, குறையாக் கொள்ளை லாபத்தை விளம்பரங்களின் மூலம் கொட்டிக்கொண்டு வருகின்றனர். மற்றைய துறைகளிலுள்ள பெரும் முதலாளிகளுக்கு வரி விதித்து அரசாங்கத்தின் பற்றுக்குறையை நிறைவேற்றிக்கொள்ள முயலுவது போலவே, பத்திரிகை முதலாளிகளுக்கும் வரி விதிக்கச் சென்னை அரசாங்கம் முனைந்திருப்பது போற்றுதற்குரிய தொன்றாகும். காரணம் இதுவரையில் வரிகொடாமலே தப்பித்து வாழும் முதலாளியினம் அது.

உணர்ச்சி வயப்பட்டு, நாட்டின் மக்களுள்ளத்தில் எழுச்சி யூட்ட வேண்டிக் கிளம்பியிருக்கும் பல சிறிய பத்திரிகைகள் விளம்பரங்களுக்காகத் தம் வாழ்வை நடத்துவதில்லை; என்றாலும் தானாகக் கிடைக்கும் சில விளம்பரங்களையாவது

(9-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 19—6—49 [காஞ்சி

# கல்கத்தா கற்பிக்கும் பாடம்

மேற்கு வங்க சட்டசபைக்கு உறுப்பினர் தேர்ந்தெடுக்கும் பொருட்டு, தென் கல்கத்தா தொகுதியில் நடைபெற்ற உபதேர்தலில் காங்கிரஸ் படுதோல்வியுற்றது; எதிர்க்கட்சி வென்றது!

காங்கிரஸுக்கும்—சமதர்மக் குடியரசுக் கட்சிக்கும் போட்டி—பலமான போட்டி—நாட்டு மக்களின் கவனமெல்லாவற்றையும் ஈர்த்து நின்ற போட்டி—பலாத்காரம் பரிமாறிக் கொள்ளும் அளவுக்கு முற்றி நின்ற போட்டி! காங்கிரஸ் கவிழ்ந்தது; சமதர்மக் குடியரசுக் கட்சி மீண்டது!

காங்கிரஸின் சார்பாகத் தோழர் சுரேஷ்சந்திரதாஸ்—குடியரசுக் கட்சியின் சார்பாகத் தோழர் சரத் சந்திர போஸ்! தாஸுக்குக் கிடைத்த வாக்குறுதிச் சீட்டுக்கள் 5780; போஸுக்குக் கிடைத்தவை 19030. போஸ் 13250 சீட்டுக்கள் அதிகம் பெற்றார், எனவே வென்றார்!

காங்கிரஸின் செல்வாக்கு எந்த அளவுக்குக் கரைந்து வருகிறது என்பதற்கு இந்தத் தேர்தல் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

அண்மையில் பம்பாயில் நடைபெற்ற, தேர்தலிலும், நாடாளும் கட்சியான காங்கிரஸின் சார்பாக நின்ற உறுப்பினர் தோற்றார்; அவரை எதிர்த்து நின்ற சோஷியலிஸ்ட் கட்சித் தோழர் வென்றார். அந்த முடிவே காங்கிரஸ் கோட்டைக்கு நல்லதொரு அதிர்ச்சியைக் கொடுத்தது.

கல்கத்தா முடிவு· காங்கிரஸ் கோட்டையின் மீது விழுந்த பேரிடியெனக் காங்கிரஸ் கனதனவான்களுக்குக் காணப்படும் என்பதில் ஐயமில்லை. என்னவோ, காங்கிரஸின் கோட்டை கரைகிறது என்பது மட்டும் திட்டவட்டமாகத் தெரிகிறது.

கல்கத்தாவில் நடைபெற்ற சாதாரண இடைக்கால உபதேர்தல் என்ற அளவில் நிறுத்தப்படவில்லை. அகில இந்திய பிரச்சினையாக அது ஆக்கப்பட்டுக் காங்கிரஸ்காரர்களால் ஆர்ப்பரிக்கப்பட்டது. காங்கிரசின் சார்பாக நின்ற தோழர் தாஸுக்கு வங்க அரசாங்கத்தின் அணைப்பு—அகில இந்திய அரசாங்கத்தின் ஆறுதல்—பண்டித நேருவின் அறிக்கை—சர்தார் பட்டேலின் உறுதிமொழி—பட்டாபி சித்தாராமய்யாவின் பக்கத்துணை—காளா வெங்கட்ராவின் தூண்டுதல்—திருமதி சுசேதா கிருபளானியின் பவனி—திருமதி ரேணுகாராயின் பார்வை—எழுதுகோல் வீரர்களின் ஒத்துழைப்பு ஆகிய இவையெல்லாம் களம் ஏந்திச் செல்லும் ஆயுதங்களாகப் பயன்பட்டன. போஸின் செல்வாக்கை அழிக்கவும், தாஸின் செல்வாக்குக்கு அதாவது காங்கிரஸின் செல்வாக்குக்கு ஆதரவு தரவுமே இவ்வாயுதங்களெல்லாம் கிளப்பி விடப்பட்டன. என்றாலும் போஸ் வெற்றிபெற்றார்!—காங்கிரஸுக்குக் கிடைத்த உதவித் தளவாடங்கள் ஏதும் கிடைக்கப்பெறாமலே வெற்றி பெற்றார்! இது எதனைக் காட்டுகிறது? காங்கிரஸ் கரையும் தன்மையை அல்லவா!

விடுதலைப் போராட்டத்தை நடத்திய 'வீராப்பை' வைத்துக் கொண்டே என்றென்றும், தன்னிச்சைப்படியே வெற்றிப்பாதையில் போய்க் கொண்டிருக்க முடியும் என்று காங்கிரஸ் எண்ணுகிறது போலும்! அன்று காங்கிரஸ் தலைவர்களை வரவேற்று; வாழ்த்துக் கூறி, வணங்கி நின்ற அதே வங்க மக்கள் இன்று "காரி உமிழ்"வானேன். ஒரு காலத்தில் அன்பினால் வரவேற்கப்பட்ட திருமதி சுசேதா கிருபளானியின் மீது "காரி உமிழவும்"—"சேற்றை வாரியிறைக்கவும்"—"காலால் உதைக்க முற்படவும்—" "பெண்களைக் கொலைசெய்த மந்திரி சபைக்கு உதவி செய்யாதே", "வங்கத்தை விட்டு வெளியேறு," "நவகாளிக்குத் திருப்பிப் போ" என்ற ஒலிகளை முழங்கவும் பொதுமக்கள் முற்பட்டார்களென்றால் காங்கிரசின் செல்வாக்கு எந்த அளவுக்குக் கரைந்தோடிப் போகிறது என்பது புலப்படவில்லையா?

கல்கத்தா தேர்தல் காங்கிரஸ்காரர்களுக்கு நல்லதொரு பாடம்! நாட்டுக்கு நல்லவை செய்வதன் மூலமே மக்களின் நன்மதிப்பைப் பெறமுடியுமே யல்லாது, விடுதலைப் போராட்டத்தால் அடைந்த பலத்தைக் கொண்டு மேலும் மேலும் வீராப்புப் பேசி வீண்காலம் கழிப்பதால் ஒன்றும் முடியாது. இன்றைய காங்கிரசின் போக்கு இனியும் தொடர்ந்தால் பலம் குறையும், 'விடுதலை வீராப்பு'ப் பயன் தராது என்பதை ஆளவந்தார்களுக்குக் கல்கத்தா தேர்தல் உணர்த்திவிட்டது. கல்கத்தா தேர்தல் கற்பிக்கும் பாடத்தால் காங்கிரஸ் இனியேனும் தன் நிலையை உணருமா?

# கடமை உணர்ச்சி கண்டு மகிழ்கிறோம்

"விடுதலை"க்கு ரூ. 10,000-0-0 ஜாமீனும், "திராவிடநாடு"க்கு ரூ. 3000--0-0 ஜாமீனும் கட்டியாக வேண்டும் என்று சென்னை அரசாங்கம் அடக்குமுறைப் பாணத்தை ஏவியிருப்பது கண்டு, கழகத்தவரல்லாத வேறுசிலரும் தங்கள் கடமையுணர்ச்சியை உணர்ந்து, நேர்மை வழி நின்று, அரசாங்கத்தின் போக்கைக் கண்டிக்க முன்வந்தது குறித்து நாம் மகிழ்கிறோம். அவர்களைப் பாராட்டுகிறோம்.

"சண்டே அப்சர்வர்" ஆசிரியர் தோழர் பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் சர்க்காரின் போக்கைக் கண்டிப்பதோடு, அகில இந்தியப் பத்திரிகாசிரியர் மாநாட்டுத் தலைவர் தோழர் சி. ஆர் சீனிவாசன் சர்க்காரிடம் இப்பிரச்சினையை எழுப்பி நியாயங் கேட்கவேண்டும், என்றும், நகரப் பத்திரிகைகளினுடையவும் ஆசிரியர்கள் கூட்டமொன்றை ஏற்பாடுசெய்து, இவ்விஷயத்தைப்பற்றி ஆலோசித்துத் தக்க முடிவு செய்யவேண்டும் என்றும் அறிக்கையொன்று வெளியிட்டுள்ளார்.

"தினசரி" ஆசிரியர், 14-6-49-ம் நாள் "ஜாமீன் கோடேரி" என்ற தலையங்கத்தின்கீழ், சர்க்காரின்

போக்கைக் கண்டித்திருப்பது பெரிதும் பாராட்டத்தக்கதாகும். "சுயராஜ்ய சர்க்காருக்கும் அந்நிய சர்க்காருக்கும் உள்ள வித்தியாசத்தை யார் முதலில் உணரவேண்டுமோ அவர்கள் இன்னும் உணராமலிருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது ........தமிழ் நாட்டின் பத்திரிகை உலக சரித்திரத்திலேயே இதுவரை எந்தப் பத்திரிகைக்கும் இவ்வளவு அதிகமான ஜாமீன் தொகை கேட்டதில்லை. சரித்திரமேகண்டிராத இந்தச் சாதனையைத்தான் இப்பொழுது நம் சுயராஜ்ய சர்க்கார் சாதித்திருக்கிறார்கள்...........சர்க்காரோ தலைபோகிற அவசரத்தில் ரூ. 10000 கொண்டா என்று கழுத்தில் துண்டைப்போட்டு இழுத்திருக்கிறார்கள். இந்தக் கெடுபிடியில் பொறுப்புணர்ச்சி இருப்பதாகத் தெரியவில்லை......தங்கள் அதிகாரம் எது வேண்டுமானாலும் செய்யுமென்ற எண்ணம்தான் இதில் தெரிகிறது ......இம்மாதிரியான ஞான சூன்யங்கள் (சில பிரகஸ்பதிகள்) உழப்பி அடிப்பதுதான் காங்கிரசுக்கும், சுயராஜ்ய சர்க்காருக்கும் கெட்ட பெயரை வாங்கித்தருகிறது.........எனவே பத்திரிகைச் சுதந்திரத்தைக் காப்பதாகக் கூறிக்கொண்டிருக்கும் அகில இந்திய பத்திரிகாசிரிய மகாநாடும், சங்கங்களும், பெடரேஷன்களும் இதில் தீவிர கவனம் செலுத்தவேண்டும். இந்த உத்தரவு ரத்தாகும் வரை கிளர்ச்சி செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்" என்று "தினசரி" ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

"எங்கள் நாடு" ஆசிரியரும் 14-6-49-ல் சர்க்காரின் போக்குப் பற்றிக் கண்டித்துத் தலையங்கம் எழுதியிருப்பது கண்டு பாராட்டுகிறோம்.

✲

## மவுண்ரோட்

7-ம் பக்கத் தொடர்ச்சி

பெற்றுக் கொண்டால்தான், மக்களுக்கு எளிய முறையில் பணியாற்ற முடியும் என்ற நிலையிலுள்ளவைகளாகவே அவைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட பத்திரிகைகளுக்கு விளம்பர வரி விதிக்கப்படுமாயின், பத்திரிகையின் வாழ்வே பாதிக்கப்படக் கூடிய நிலை ஏற்படக்கூடும். அந்த நிலையிலுள்ளவர்களை, வரி விதிக்க முற்படும் அரசாங்கத்தின் போக்குக் கண்டு வருந்தச் செய்வார்கள் என்பதும் உண்மை.

"சிறிய பத்திரிகைகளின் கஷ்டங்களை நான் உணர்ந்துகொள்ள முடியும். அவைகளுக்கு உதவியளிக்க நான் விரும்புகிறேன்."

என்று பிரதமர் ராஜா கூறுவதைக் காணும்போது, மேற்கூறிய உண்மையை உணர்ந்து, சிறிய பத்திரிகைகளுக்கு அதாவது குறைந்த அளவு விளம்பர விகித வருமானம் பெறும் பத்திரிகைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுமோ என்று எண்ண இடமேற்படுகிறது. அப்படி ஏற்பட்டால்தான் நீதி புரிந்ததாகும்; சட்டமும் முழுமனதுடன் நாட்டு மக்களால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாக விளங்கும்.

பத்திரிகை உலகில் கொள்ளை இலாபமடித்துவரும், முதலாளிகள் 'எதேச்சாதிகார தர்பார்' நடத்திவர இதுவரையில் வசதி ஏற்பட்டிருந்ததால், நாட்டுமக்களுக்கு விதிக்கப்படும் வரிகளைப் பொறுத்து, பொது மக்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறார்கள் என்ற கவலையேயில்லாமல் அரசாங்கத்தின் வரி விதிப்புகளை ஆதரித்தனர். இராசகோபாலாச்சாரியார் அன்று விதித்த விற்பனை வரிக்கு ஆதரவு தந்தனர்; எதிர்த்துப் பேசாமல் இருந்தனர்; எதிர்த்துப் பேசியவர்களையும் — பேசிய பத்திரிகைகளையும் கேலி செய்தனர். அதே விற்பனை வரி வளர்ந்து இன்று தங்கள் மடியில் கையை வைக்க வரும்போது சீறிக் குதிக்கின்றனர். இந்தப் பத்திரிகை முதலாளிகளெல்லாம் வரிகொடுக்கத் தாளாதவர்களா? மாதம் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கில், இலட்சக் கணக்கில் கொள்ளையிடுகின்றனர் விளம்பர விகிதத்தின் மூலம். அந்தக் கொள்ளையில் ஒரு பகுதியை வரவு செலவுத் துண்டுவிழும் அரசாங்கத்திற்குக் கொடுத்தால் என்ன? கொடுத்தால் என்ன குடிமூழ்கிப் போய்விடும்? சிறிது ஆடம்பரமும்— சிறிது அகம்பாவமும் இதனால் குறையலாமே தவிர, இவர்களுக்கு இதுவரையில் ஏற்பட்டிருக்கும் நலன்கள், எவ்வகையில் குறைந்துவிடும்? தங்களுடைய முதலாளித்வப் போக்கிற்குச் சிறிதளவும் பாதகம் ஏற்பட்டுவிடக் கூடாது என்று கூக்குரலிட்டுக் கொக்கரிக்கின்றன, 'இந்து'வும், 'சுதேசமித்திரனு'ம், அவையன்ன பிறவும்.

"சிலபத்திரிகைகள் ஏராளமாக இலாபம் சம்பாதிக்கின்றன. ஒரு பத்திரிகை மட்டும், விளம்பரங்கள் மூலம், மாதம் ரூ 3 இலட்சம் சம்பாதிக்கிறது. அதன் பெயரை நான் குறிப்பிட விரும்பவில்லை. எந்தப் பத்திரிகையை நான் குறிப்பிடுகிறேன் என்பதை நீங்கள் சுலபமாகத் தெரிந்து கொண்டிருப்பீர்கள். இந்தப் பத்திரிகையின் ஆட்சேபம்தான் பிரமாதமாக இருந்தது"

என்று பிரதமர், 9—6—49ம் நாள் நெல்லையில் நடைபெற்ற அந்தப் பொதுக்கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார். மேலே அவர் குறிப்பிட்டுள்ளது, 'இந்து'ப் பத்திரிகையைத்தான் மறைமுகமாகக் குறிக்கின்றன என்பதை அனைவரும் எளிதில் அறிந்துகொள்ளலாகும்.

காங்கிரஸை இதுவரையிலும் ஆதரித்து வரும் பத்திரிகைகளாயிற்றே என்பதையும் கருதாமல், அவைகள் இப்பொழுதுமேற்கொண்டிருக்கும் பிற்போக்குத் தன்மை கண்டு வெகுண்டெழுந்த பிரதமர் ராஜா அவர்கள், சற்றுக் காரசாரமான சொற்களால் அப்பத்திரிகைகளின் உண்மையான நோக்கத்தை வெளியிட்டுவிட்டார். "அறிவையும், செய்கையையும் விற்று ஏராளமாக இலாபம் சம்பாதித்துள்ள பத்திரிகைகள், இந்த வரி விதிப்பை எதிர்ப்பதுதான் எனக்குப் புரியவில்லை" என்று இடித்துரைக்கிறார். "இப்பத்திரிகைகள் இவ்வளவு இலாபம் சம்பாதிப்பது எப்படி நியாயமாகும்" என்று கேட்கிறார், இதுவரையில் ஏற்படாத துணிவுடன், "விளம்பரங்கள் மீது வரி விதிப்பது தங்களைப் பாதிக்கும் என்றால், அவர்கள் கூறுவதை நான் பரிசிலனை செய்யத் தயாராக இருக்கிறேன்" என்று சவாலும் விட்டிருக்கிறார். மவுண்ட்ரோடு 'பெம்மான்கள்' இந்தச்சவாலை எற்றுத் தம் நிலைகளை விளக்குவது தானே. என் இன்னமும் மௌனம் சாதிக்கின்றன.

பத்திரிகை உலகில் காட்டாட்சி நடத்திவந்த இந்தச்சிறு முதலாளிக் கூட்டம், அரசாங்கத்தை அடிக்கடி

மிரட்டித் தங்கள் காரியத்தைச் சாதித்து வந்திருக்கின்றன. இனியும் சாதித்து வரும் என்றாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. பத்திரிகை முதலாளிகளின் சுட்டுவிரலசைவிற்கு அரசாங்கமும் கூட அடிக்கடி அசைவு கொடுத்துக்கொண்டு, அதன் போக்குப்படிச் செயலாற்றி வந்திருக்கிறது. இந்தப் பத்திரிகை முதலாளிகள் தங்கள் கொள்கைக்கு மாறுபட்டு விளங்கும் எத்தனையோ சிறிய பத்திரிகைகளை, அரசாங்கத்தின் உதவிகொண்டு தலை எடுக்கவொட்டாமல் செய்திருக்கின்றன; அழித்தொழித்திருக்கின்றன; சிதைத்துச் சீரழித்து வந்திருக்கின்றன; இன்னும் எத்தனையோ சீரிய நல்ல பத்திரிகைகளையெல்லாம் அழித்தொழிக்கும்படியாக அரசாங்கத்திர்கு ஆலோசனை கூறிவருகின்றன. தம் இன நலன்களுக்கு உலை வைக்கக் கூடிய சிறந்த காவியங்களையும், கதைகளையும், கட்டுரைக் கோவைகளையும், நாடகங்களையும் பறிமுதல் செய்துவிடும்படி அரசாங்கத்திற்கு எடுத்துரைத்து வந்திருக்கின்றன. இவ்வளவு கேடுகளையும் புரிந்து, விளம்பரங்களையெல்லாம் தமக்கே கிடைக்கும்படியாகச்செய்து கொண்டு, அவற்றினால் வரும் கொள்ளை இலாபத்தை முழுவதும் ஏப்பமிட்டுக்கொண்டு வருகின்றன. அப்படி ஏப்பமிடும் பொருளிலே ஒரு பகுதியை அரசாங்கத்திற்கு வரியாகக் கொடு என்றால், 'இந்து'வுக்கும், 'சுதேசமித்திரன்'க்கும் வயிறு பற்றிக்கொண்டு எரிகிறது. ஏழைகளின் தலைமீது விற்பனைவரி விதிக்கும்போதெல்லாம் ஆதரித்து இருந்துவிட்டு, இப்பொழுது அந்த வரி தம்மீது பாயவரும்போது, அரசாங்கத்தின் மீது சீறத்தலைப்படுகின்றன.

பத்திரிகையின் சீறுதல்களுக்குப் பல சமயங்களிலே, அரசாங்கம் படிந்து கொடுத்துவந்துள்ளது. அதனை நினைவில் வைத்துக்கொண்டு இப்பொழுதும் சீறுகின்றன; மிரட்டிப் பார்க்கின்றன. பத்திரிகை முதலாளிகளின் தீர்மானத்திற்குப் பதிலளிக்கையில், நிதிமந்திரி, கோபால் ரெட்டியார், பத்திரிகைகளுக்குச் சலுகை காட்ட நாங்கள் தயங்கமாட்டோம் என்றும், பத்திரிகைகள் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்துவிடக் கூடாதென்றும் அஞ்சிப் பணிந்துதான் கேட்டுக்கொண்டுள்ளார். பிரதமர் குமாரசாமி ராஜாவும் தமக்குப் படிந்துவிடுவார் என்றே, பத்திரிகை முதலாளிக்கூட்டம் எண்ணியிருந்திருக்கிறது. ஆனால் பிரதமர், வழக்கத்திற்கு மாறாக, பத்திரிகைகளின் மிரட்டலுக்குப் பயப்படாமல், பாராட்டத்தக்க வகையில், பத்திரிகை முதலாளிக் கூட்டத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

"மந்திரிகள், சட்டசபை அங்கத்தினர்கள் முதலியோருடைய பிரசங்கங்களை, விளம்பரவரி விதிப்புக்கு எதிர் நடவடிக்கையாக அவர்கள் பிரசுரிப்பதில்லையென்றால், நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்பது சர்க்காருக்குத் தெரியும். முதலாவதாக, எல்லாச் செய்திகளையும் ரேடியோ மூலம் வெளியிட முடியுமாதலால்பொது மக்கள் செய்தியின்றித் தவிக்க மாட்டார்கள். இரண்டாவதாகப் பணம் கொடுத்துப் பத்திரிகை வாங்கும்பொதுமக்கள், மந்திரிகள், சட்டசபை அங்கத்தினர்களின் பிரசங்கங்கள் பிரசுரமாகாத பத்திரிகைகளை வாங்காமலிருந்து விடுவார்கள். பிரசுரிக்காத பத்திரிகைகளைப் பகிஷ்கரிக்கும்படி பொதுமக்களை வேண்டிக்கொள்ள நான் கொஞ்சமும் தயங்கமாட்டேன். இம்மாதிரி மனப்போக்கைத் தாங்கள் ஆதரிக்க முடியாதென்று பொதுமக்கள் இப்பொழுதே கூறவேண்டுமென்று நான் விரும்புகிறேன். இது அவர்களுக்கு நல்ல படிப்பினையாகவும் இருக்கும்"

என்று பிரதமர் பத்திரிகை முதலாளிகளுக்கு எச்சரிக்கை விடுப்பதோடு, பொதுமக்களுக்கு வேண்டுகோளையும் விடுத்துள்ளார்.

சிறிய பத்திரிகைகளுக்குச்சலுகை காட்டி, விளம்பரக் கொள்ளையடிக்கும் பத்திரிகைகளுக்கு விளம்பரவரி விதிக்கச் சென்னை அரசாங்கம் முற்படுமேயானால் பொதுமக்களின் ஆதரவு, அந்த அளவுக்கு. அரசாங்கத்திற்குக் கிடைக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனால் எடுத்த இந்த அவசியமான செயலில் சிறிது தளர்ச்சி ஏற்படுமேயானால், அப்பொழுது பொதுமக்கள் பரிகசிக்கத்தான் செய்வர். பொதுமக்களின் ஆதரவு இந்த வகையில் உறுதியாக உண்டு என்பதைப் பிரதமர் ராஜா உணர்ந்துகொள்ளவேண்டும். பொதுமக்கள் இந்த வரியை ஆதரிக்காவிட்டால், தாம் ராஜினாமா செய்யக்கூடத் தயார் என்று சூளுரை கூறியதிலிருந்து, பொதுமக்களின் ஆதரவு இதற்கு இருக்கிறது என்பதை அவர் உணர்ந்துகொண்டார் என்றே தெரிகிறது.

கொள்ளை லாபமடிக்கும் பத்திரிகைகளுக்கு விளம்பரவரி விதிப்பது முறைதான் என்று வாதாடுகிறோமேயல்லாது, அரசாங்கம் ஏற்படுத்தும் எல்லாவரிகளும் சரியானதே என்று இங்குநாம் வாதாடவில்லை.

வரவு — செலவுத்திட்டத்தில் துண்டுவிழுவதை விளம்பரவரிமூலம் ஓரளவுக்கு நிறைவு படுத்திக்கொள்வதை நாடு வரவேற்கும் என்பதில் ஐயமில்லை. மற்றவரிகளைத் தனித்தனியாக ஆராய்ந்து சரியானதென்றால் ஏற்றுக்கொள்ளவும், அநீதியுடையதானால் அதனைக் கண்டிக்கவும் முற்படவேண்டும். அந்த முறைப்படி இந்த விளம்பரவரி ஏற்றுக் கொள்ளக்கூடியவொன்றேயாகும்.

'மவுண்ட்ரோடு பெருமானுக்கு' பிரதமர் ராஜா வழங்கியிருக்கும் 'அர்ச்சனைகளை', நாடு அறிந்து இனியேனும் உண்மைநிலை தெரிந்து, நல்ல பாடத்தை அப் 'பெருமானுக்கு'க் கற்பிக்குமாக!

முதலாண்டு
நிறைவு இதழ்!
எரிமலை
By
A. K. வேலன்.
25-6-49-ல் வெளிவருகிறது.
விலை அணா 2.
செந்தமிழ்ப் பாசறை,
கரந்தை — தஞ்சை.

6-ம் பக்கத் தொடர்ச்சி

கோர்வைகளை "திராவிடநாடு" இதழைத்தவிர வேறு எந்த இதழ் தீந்தமிழில் தருகிறது?

அந்த அளவிற்கு வாலிபர்களுக்கும் மாணவர்களுக்கும் அரிய சாதனமாயுள்ள "திராவிடநாடு" அரசாங்கத்தார் கண்ணுக்குப் பிடிக்கவில்லைப் போலும்! எனவேதான் 'எடு ரூ. 3000. என்றனர். இந்தக் கொடிய அடக்குமுறை, அதனை வீசிய அரசாங்கம் பாசிசப் பாதையில் விரைவில் நடந்து செல்கிறது. அதன் விளைவே ரூ. 3000. வாலிபர்கள், மாணவர்கள் ஏன் எஃலோருமே, மக்களுக்காக அயராது உழைக்கும் "திராவிட நாடு" இதழுக்கு அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள இந்த ஆபத்து நேரத்தில் தோள் கொடுத்து உதவுவார்கள் என்பது எனது அசைக்கமுடியாத நம்பிக்கை.

என்னுலான சிறு தொகை ரூ 5. எனது அன்புக் காணிக்கையாக அனுப்புகிறேன். ஆட்சியாளர் வீசிய இந்தப் பாணத்திலிருந்து "திராவிட நாடு" மீண்டு, இன்பத் திராவிடம் காண மேலும் மேலும் வெற்றி பெற்று உழைக்குமாக. வெல்க திராவிடம்!

அன்பன்

**இரே. இளம்வழுதி,**

குறிஞ்சிப்பாடி.

*

T. SHUNMUGAM, EX-PRESIDENT Chingleput Dist, Board.

TIRUVOTTIYOOR, MADRAS. 15—6—49

அன்புமிக்க அண்ணு, அவர்களுக்கு வணக்கம்.

இத்துடன் செக் ரூ. 100. அனுப்பியுள்ளேன். தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

உடனே கோர்ட்டில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்யவும். கொஞ்சமும் தாமதிக்கக் கூடாது.

T. **சண்முகம்.**

வெற்றி நமதே.

*

## நன்கொடை தந்துதவிய அன்பர்கள்

| | |
|---|---|
| சென்றவார வரவு | 650—0—0 |
| கே. கரியபெருமாள், கும்பகோணம் | 1—0—0 |
| குமரன் & கோ, காஞ்சிபுரம் | 50—0—0 |
| ஆர். ஆர். இராமமூர்த்தி, மதுரை | 3—0—0 |
| வி. சவுரிராசன், தஞ்சாவூர் | 5—0—0 |
| பி. எஸ்.கே. சன்ஸ் பணியாட்கள், காஞ்சி | 21—0—0 |
| மே. க. கோ. பொதுக்கூட்ட வசூல் | 11—2—7 |
| „ ப. பஞ்சாபகேசன் | 1—0—0 |
| „ என். ஓ. பொன்னுசாமி | 1—0—0 |
| வி. கந்தசாமி, கலிகட் | 2—0—0 |
| என். இராமசாமி & அங்கப்பன், கருவனூர் | 1—0—0 |
| வி. சு. காமாட்சி, நாகல் நகர் | 1—0—0 |
| அ. ல. முத்தய்யா, திருவையாறு | 1—0—0 |
| எ. சி. நாயுடு, கும்பகோணம் | 1—0—0 |
| கே. இராமநாதன், சேலம் | 3—0—0 |
| S. S. N. புருஷோத்தமன், கொமாரபாளயம் | 10—0—0 |
| எஸ். டி. சிதம்பரம், கோயமுத்தூர் | 2—0—0 |
| எம். சுவாமியப்பன் „ | 10—0—0 |
| வி. கன்னய்யா, ஆரணி | 5—0—0 |
| பி. சுந்தரம், மதுரை | 5—0—0 |
| ர. து. சுகுணன், பெங்களூர் | 5—0—0 |
| எஸ். கே. சம்பந்தம், குறிஞ்சிப்பாடி | 100—0—0 |
| எஸ். இரேஜேஸ்வரி அம்மையார், சென்னை | 10—0—0 |
| எம். நமசிவாயம், சென்னை | 10—0—0 |
| எம். எஸ். எம். மொய்தீன், சென்னை | 10—0—0 |
| திராவிடப் பண்ணை, திருச்சி | 111—0—0 |
| எஸ். வி. இலிங்கம், திருச்சி | 10—0—0 |
| எல். மயிலானந்தன், திருச்சி | 2—0—0 |
| கு. ச. த. சங்கர சதாசிவம், குளத்தூர் | 3—0—0 |
| கே. மாரியப்பன், நீலகிரி | 1—0—0 |
| டி. பி. சிங்காரம், நீலகிரி | 1—0—0 |
| எஸ். அப்பாவு, ஈரோடு | 5—0—0 |
| பி. பாலசுந்தரம், கோயமுத்தூர் | 2—0—0 |
| கே. கே. நீலமேகம், கும்பகோணம் | 25—0—0 |
| கு. மாணிக்கம், பூந்தோட்டம். | 2—0—0 |
| வி. சி. மணிவண்ணன், வேலூர். | 4—0—0 |
| கருணை எம். ஜமால், திருவாரூர். | 5—0—0 |
| அ. அலமேலு அம்மையார், சென்னை. | 20—0—0 |
| து. ம. வானமாமலை, திருச்சி. | 3—0—0 |
| ஆர். சோமசுந்தரம், நன்னிலம். | 1—0—0 |
| இரா. கஜேந்திரன், விழுப்புரம். | 5—0—0 |
| எ. பழனியப்பன், விழுப்புரம். | 5—0—0 |
| நகைசுவைஅரசர் என்.எஸ்.கே. சென்னை. | 251—0—0 |
| பி. ஸ்டாலின், சென்னை. | 100—0—0 |
| இராம. சின்னய்யா, திருமயம். | 100—0—0 |
| வி. டி. பெரியசாமி, சென்னை. | 25—0—0 |
| பி. பழனிச்சாமி, பெத்தாம்பாளயம். | 50—0—0 |
| எஸ். எம். சாமி, சாலவாக்கம். | 1—0—0 |
| இரெ. இளம்வழுதி, குறிஞ்சிப்பாடி. | 5—0—0 |
| கே. ஜெம்புலிங்கம், திருசிராப்பள்ளி. | 1—0—0 |
| தி. பா. சீனுவாசன், சேலம். | 1—2—0 |
| எஸ். எ. இராசமாணிக்கம், கோயமுத்தூர். | 2—0—0 |
| வி. சி. வேலாயுதம், பெங்களூர். | 1—0—0 |
| டி. என். கோவிந்தராசன், திருசிராப்பள்ளி. | 1—0—0 |
| ஆர். திருஞானசம்பந்தம், மாயவரம். | 1—0—0 |
| ஆர். அப்துல் மஜீத், நீடூர், | 5—0—0 |
| வி. ஜெயராமன், திருவெண்காடு. | 1—0—0 |
| எம். ஆர். செல்லப்பா, மேலப்பாலூர். | 2—0—0 |
| டி. சண்முகம், திருவொற்றியூர். | 100—0—0 |
| பி. ஆர். பொன்னுசாமி, கும்பகோணம். | 50—0—0 |
| திராவிடன் பதிப்பகம், வேலூர் N. A. | 10—0—0 |
| எம். எஸ். கன்னியப்பன், காஞ்சிபுரம் | 10—0—0 |
| எஸ். சிவப்பிரகாசம் „ | 2—0—0 |
| வி. ஆர். முத்தியாலு „ | 5—0—0 |
| எல். கே. மூர்த்தி „ | 2—0—0 |
| ஈ. கே. மூர்த்தி „ | 2—0—0 |

| | | |
|---|---|---|
| | | 2—0—0 |
| வி. பரமசிவம் | ,, | 2—0—0 |
| எம். நாகராசன் | ,, | 2—0—0 |
| சி. என். இராமசந்திரன் | ,, | 2—0—0 |
| ஆர். பாலசுப்பிரமணியம் | ,, | 15—0—0 |
| தர்மாபாய்-கோயில்பிள்ளை, தேவகோட்டை | | 2—0—0 |
| என், ஆர். சேகர், கோட்டக்குப்பம். | | 1—0—0 |
| பி. பி. செல்லையா, புதியம்புதூர். | | 25—0—0 |
| எஸ். பெருமாள், புதுச்சேரி. | | 2—0—0 |
| ஆர். முனுசாமி, மயிலாப்பூர். | | 25—0 0 |
| எஸ். எம். இராமநாதன், சிறுகுடி. | | 5—0—0 |
| எஸ். ஜனார்த்தனம், கரியமாணிக்கம். | | 2—0—0 |
| பி. வி. மாயன், பாம்பே. | | 20—0—0 |
| எம். கே. கோவிந்தராசபாகவதர், திருச்சி | | 3—8—0 |
| கே. சங்கரன், சிரங்கம். | | 25—0—0 |
| திராவிடர் கழகம், வேலூர். N. A. | | 2—0—0 |
| பி. எ. பொன்னுரங்கம், வேலூர். | | 500 -0—0 |
| ஜுபிட்டர் பிக்ஸர்ஸ், கோயமுத்தூர். | | 500—0—0 |
| நேஷனல் பிக்ஸர்ஸ், வேலூர். | | 5—0—0 |
| க. த. சு. மணி, காஞ்சிபுரம். | | 5—0—0 |
| வெ. சம்பந்தன், | ,, | 3—0—0 |
| சி. இராசாபாதர், | ,, | |
| | ஆக மொத்தம் | 3000—12—7 |

# எனது நன்றி

—*—

**அரசியலார், "திராவிட நாடு" இதழின் மீது தங்கள் அடக்குமுறைப் பாணத்தை ஏவி, ரூபாய் மூவாயிரம் ஜாமீன் கட்டுமாறு கட்டளை பிறப்பித்ததை, இது "திராவிட நாடு" இதழின் மீது மட்டும் ஏவப்பட்ட பாணமல்ல, திராவிடப் பெருங்குடி மக்கள் அனைவர் மீதுமே ஏவப்பட்ட பாணம் என்பதை எடுத்துக்காட்டும் முறையில், அரசாங்கத்தின் அடக்குமுறைக் காணிக்கையாக, அவர்களால் கோரப்பட்ட ரூபா 3000 - 0 - 0 யும் அன்பர்கள் தந்துதவியுள்ளார்கள்.**

**ஜாமீன் தொகை கட்ட ரூபாய் மூவாயிரம் தேவையென்று வேண்டுகோள் விட்ட ஒருவாரத்துக்குள்ளாகவே குறிப்பிட்ட தொகை சேர்ந்துவிட்டது.**

**அரசியலாரின் அறைகூவலை ஏற்று, அன்புடன் உதவி செய்து ஆதரித்த அனைவருக்கும் எனது நன்றியறிதலையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**ஜாமீன் கட்டுவதற்காகக் குறிப்பிடப்பட்ட தொகை கிடைத்துவிட்டபடியால், இனி, அன்பர்கள் இதற்காகப் பணம் அனுப்ப வேண்டாமென்று கேட்டுக்கொள்வதுடன் மீண்டும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**அன்பன்,**

**அண்ணாதுரை.**

## காமராஜர் கீதம்

5-ம் பக்கத் தொடர்ச்சி

அமைதி தேவை, அமைதி தேவை என்றால் எங்கிருந்து அமைதி உண்டாகும், என்பதனைக் காமராஜர் உணர்ந்ததாகத் தெரியவில்லை. அப்படியே அமைதி ஏற்பட்டால்கூட அதுவுந் தற்காலிகமானதாகவே இருக்குமே யொழிய, நிரந்தரமானதாக இருக்குமா? நாட்டிலே உள்ள வறுமையும், அறியாமையும், குறைகளும், ஊழல்களும், அப்படியே தானிருக்கும்எங்களாட்சியில்,அதையும் சகித்துக்கொண்டு அமைதியாகத்தானிருக்க வேண்டுமென்று காமராஜர் கருதுகிறாரா?

கடைசியாகக் "காங்கிரசை ஆதரியுங்கள்" என்று காமராஜர் கூறியதிலிருந்தே இது தேர்தல் கீதமென்பது எல்லோருக்கும் . எளிதில் புரிந்துவிடும். இந்த ஒரு வார்த்தையோடு அவர் நின்றிருப்பாரானால் நாம் கவலைப்படப் போவதில்லை. ஆனால், "குழப்பத்தை உண்டாக்குகிறார்கள்" என்று கூறுகிறாரே. திராவிடர் கழகம் நாட்டிலே ஏதாவது இதுவரை குழப்பத்தையோ, ஒரு சிறு கலகத்தையோ ஏற்படுத்தியது என்று காமராஜர் தானாகட்டும் மெய்ப்பிப்பாரா? அல்லது பொது மக்கட்குத் தானாகட்டும் திராவிடர் கழகத்தால் இதுவரை ஏதாவதொரு நஷ்டமோ, கஷ்டமோ, ஏற்பட்டது என்று நிரூபிப்பாரா? "தேர்தலில் நின்று ஜெயிக்கட்டும், திராவிடர் கழகம், பதவிக்குவந்து பன்னிரண்டு அவுன்ஸ், அரிசி கொடுக்கட்டும், கோயிலை இடிக்கட்டும், புத்தகத்தைக் கொளுத்தட்டும்," என்று காமராஜரின் (ச)வால் நீளவேண்டிய தேவையில்லை; பொய்க் குறை கூற வேண்டிய அவசியமுமில்லை! திராவிடர் கழகம் இன்றையவரையில் தேர்தலில் கலந்து கொள்ளுவதில்லையென்று முடிவு செய்திருக்கிறது; தேர்தல் முறை இன்று பணத்திற்கும், அதிகாரத்திற்கு மட்டுமே கட்டுப்பட்டிருக்கிறது என்ற காரணத்தால். இதை அறியாதவர் போல், புலியைப் பூனை போருக்கு அழைப்பது போன்று, கழகத்தைப் பார்த்துக் காமராஜர் சீறிப்பார்க்கிறார்.

## மூடநம்பிக்கை

4-ம் பக்கத் தொடர்ச்சி

கூடாதென்ற பழக்கமும் இந்த ஆன்ம சித்தாந்தத்திலிருந்து ஏற்பட்டதாகும். கொள்ளிவைத்தவர்கள் முகம், செத்தவனுடைய ஆன்மாவுக்குத் தெரியுமாதலால், வீட்டுக்கு அவர்கள் திரும்பும் காலை அவர்கள் எரியும் பிணத்தைத் திரும்பிப் பார்க்கும் பட்சத்தில், வேகும் பிணத்தருகே அலைந்து கொண்டிருக்கும் அதன் “ஆன்மப் பேய்” (The soul Hovering near the burning corpse) அவர்களுடன் தொத்திக்கொண்டு, வீட்டுக்கு வரும் என்ற கற்பித பயத்தால் நேர்ந்த பழக்கமென அறிக.

வீட்டுக்கு அருகே வந்தபோதும், வீட்டில் நுழைவதற்கு முன்னும், கால்களைக் கழுவிக்கொண்டு உள் நுழைய வேண்டுமென்ற பழக்கமும், இந்தஆன்மசித்தாந்தத்தைத் தழுவி நிற்கின்றதென்று அறியவும். எப்படியெனில், பேய், பிசாசுகள், தண்ணீரைத் தாண்டாவாம்! இதே காரணத்தை ஒட்டியே தற்காலப் பிராமணர்கள், தாங்கள் சாப்பிடுங் காலை, இலையைச் சுற்றி ஜலம் தெளித்துக் கொண்டு, சாப்பிடுவதுமுண்டு. ஜலத்தைத் தாண்டிக்கொண்டு பேய், பூதங்கள், உண்ணும் உணவை உண்ணுவாம்!!

விடியற் காலங்களில் சாணித் தண்ணீரை வீட்டுக்கு எதிரில் தெளிப்பதும் இதே காரணத்தினால் என அறிக. பாதி இராத்திரி முதல் கதவு சாத்தப்பட்டு நுழைய வழியில்லாமல் வெளியில் இருந்த பேய், பிசாசுகள், கதவைத் திறந்தவுடன் உள்நுழையாதிருக்கச் சாணித் தண்ணீர் தெளிக்கும் வழக்கம் உண்டாயிருக்கவேண்டும். சாப்பிடும்போது, விளக்கு அவிந்துவிட்டால், உண்ணும் உணவை எடுத்துவிட்டு, தீபமிட்ட பிறகு தண்ணீரைத் தெளித்தும் தனது தலைமேல் தண்ணீரைத் தெளித்துக்கொண்டும் திரும்ப உண்ணுவது சில இடங்களில் பார்க்கலாம். இதுவும், இந்தப் பேய் கற்பிதத்தால் பழக்கத்திற்கு வந்திருக்க வேண்டும். இருட்டில்தான் பேய் பிசாசுகள் உணவை உண்ணுமாம்! விளக்கு அவிந்தவுடன் பேய் பிசாசுகளால் உண்ணும் உணவு தீட்டுப் பட்டு விட்டபடியால் மறுபடியும் அந்த உணவைத் தீண்டத் தகாதென்பதும், விளக்கு ஏற்றியவுடன், பேய் பிசாசுகள் ஓடி விடுமாகையால், அப்போது புதிய உணவை உண்ணலாமென்பதும் ஓர் குயுக்தி என எண்ணவேண்டியிருக்கிறது.

இவ்வித மூடப் பழக்கங்களெல்லாம், மனிதன் இறந்தபிறகு அவன் “ஆன்மா” வெளியில் உலாவுகின்றது என்ற கற்பிதத்தால் வந்தவை. மனிதனுக்குள் ஓர் “ஆன்மா” இருந்து வருகிறது. அந்த “ஆன்மா” பெருவிரல் பருமனுள்ளது. தேகம் மரித்த பின்பு, அந்த “ஆன்மா” செத்தவன் வீட்டுப் பக்கங்களிலும், அடுத்த செடிகளிலும், சுடுகாடுகளிலும் தங்கியிருக்கும். இந்த ஆன்மாக்கள்தான், “பேய்” “பிசாசு”களாக மனிதசஞ்சாரமில்லாத இடங்களில் உலாவிக்கொண்டிருக்கும். இருளிலோ, அல்லது “உருமவேளை”யிலோ (மத்தியானம்) “ஒண்டிசண்டியாக” (தனிமையாக) யாதாமொருவன் தனித்த இடங்களில் போவானேயாகில், அவனை இந்தப் பேய், பிசாசு, அண்ணமார், தம்பிமார், கன்னிமார், முனீஸ்வரன் முதலிய “பூதப் பேய் பிசாசுகள், இவனை அறைந்து” நோயால் பாதைப்படும்படி செய்து விடுகின்றனவாம். இந்த நம்பிக்கைதான் உலக முழுமையும் நிறைந்து வருகிறது. பேய்களுக்கும், பிசாசுகளுக்கும், முனிவீரன்களுக்கும், காற்று கருப்பன்களுக்கும், இந்த “ஆன்மா” கற்பிதமே, காரணமாகும். ஆன்மா ஒன்றுண்டென்ற நம்பிக்கை கற்பிதமென்று நமது பாமர மக்கள், உணர்வார்களேயாகில், இந்தக் கற்பிதப் பேய் பிசாசுகள் உலகை விட்டுப் பறந்தோடிப் போமென அறிக.

இந்தப் பேய் பிசாசு நம்பிக்கையால் உலகில் அநந்த கொடுமைகள் நடந்து வருகின்றன. ஒரு காலத்தில் சூன்யம் வைத்தல் (Nicromancy or Black Magic) என்ற பொய் வதந்தியை நம்பி, அநேகர் கொல்லப்பட்டார்கள். அந்த “சூன்யத்தை”ப் போக்க, தலைச்சன் குழந்தைகளை (First Born) காவு கொடுத்தார்கள்!!! இக்கொடிய பாதகத்தால், ஆயிரக்கணக்கான உயிர்கள் மாய்ந்தன. ஆயிரக்கணக்கான குழந்தைகள் கொல்லப்பட்டன. ஆயிரக்கணக்கான கிழவிகளை “மந்திரக்காரி” என்றும் சூன்யக்காரி என்றும் வதைத்துக் கொன்றார்கள். ஆயிரம் வருஷங்களாக ஐரோப்பா தேசத்தில் (Witch craft) என்று வழங்கிவந்த சூன்யம் என்ற பழக்க வார்த்தையால் சொல்லப்பட்ட (Wizards, Witches) சூன்யக்காரர்கள், சூனியக்காரிகளுக்குக் கணக்கு வழக்கேயில்லை!! இம்மகா பாதகத்திற்கு அடிமையாக இருந்தது “ஆன்மா” என்ற ஓர் கற்பிதச் சொல்லென அறிக. இந்தக்கற்பிதச் சொல்லுக்கே நரக மோட்சங்களும், நிர்வாண சமாதிகளும், திதி, திவசங்களும், கோயில்களும், குளங்களும் மசூதிகளும், மாதாகோயில்களும், திருவிழாக்களும், தீர்த்தங்களும், பெரிய புராணங்களும், கந்தபுராணங்களும், வேதங்களும், வேதாந்தங்களும் தோன்றியுள்ளன. இந்தச் சொல் ஒன்றை மாத்திரம், கற்பிதமென அறிந்த மாத்திரத்தில் எல்லாப் பேய், பிசாசுகளும், இருளன், வீரன் காட்டேரிகளும், சிவன், விஷ்ணு, பிரமாக்களும் 33 கோடி தேவர்களும், 48000 ரிஷிகளும், இவைகளுக்குக் கட்டியுள்ள கோயில், மசூதிகளும், விகாரங்களும், (Viharas) புத்தர் கோயில்களும், சிவன்கோயில்களும் பறந்தோடிப்போமென அறிக. இதற்கு அத்தாட்சி வேண்டுமானால், இந்தக் கற்பித வார்த்தையை அறியாத குழந்தைகளுக்கும், மனிதர்களுக்கும் “கடவுள்” என்ற கற்பிதச் சொல்லே தெரியாது! பேய் பிசாசுகளும் தெரியாது. இந்தச் சொல்லை கற்பிதச்சொல்லென அறிந்த விஞ்ஞானிகள், ‘கடவுளும்”, கற்பிதச் சொல்லென்றே தீர்மானித்து வருகின்றனர். மனிதருக்குள் சொற்கள் பரிணமித்து (Evolve) வருங்காலையில் “ஆன்மா” ‘உயிர்’ “பிராணன்” என்ற சொற்கள் முதல் தோன்றின. அந்த சொற்களிலிருந்து, ‘பேரான்மா” “பேருயிர்” என்ற சொற்கள் பெறப்பட்டன. இந்தச் சொற்களை கடவுளென்ற பதத்திற்குச் சாட்டி, “மனிதன்” சிற்றுயிர் என்றும் ‘கடவுள்’ பேருயிரென்றும் வழங்கிவந்தனர். இதுதான் கடவுளென்ற பதத்தின் பரிணாமம். (Evolution) ஆதி மனிதனுக்கு “ஆன்மாவும்” தெரியாது. ‘கடவுளும்’ தெரியாது. பேச ஆரம்பித்த பிறகே, இந்தச்சொற்கள் கற்பிக்கப்பட்டன.

❀

# காமராஜரின் தேர்தல் கீதம்!

சின்னாட்களாகவே, மட்டரகக் காங்கிரஸ்காரர்கள், எங்கு சென்றாலும், எதுபற்றிப் பேசினாலும் எதிர்க்கட்சிக்காரர்களைக், குறிப்பாகத் திராவிடர் கழகத்தைத் தாக்கிப் பேசிக்கொண்டு வருகின்றனரென்றாலுங்கூட, காங்கிரஸின் பொறுப்பு வாய்ந்த தலைவர் காமராஜர் அவர்களுங்கூட, 'மஞ்சள் காமாலைக்கண்ணோக்கு'டன் திராவிடர்கழகத்தைச் சற்று அதிகமாக திட்டி வருகிறார். இதனால் அவருக்கு என்ன பெருமை ஏற்படுமோ நாமறியோம். அவர்களின் பிரச்சாரத்திட்டம் அது தான் போலும்! சமீபத்தில் தேர்தல் வருகிறதல்லவா? அதற்காகத்தான் காங்கிரஸ்காரர்கள் இத்தகைய தேர்தல் பிரச்சாரத்திலீடுபட்டிருக்கின்றனர் போலும்! காங்கிரஸ் காரர்கள், குறிப்பாகக் காமராஜர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்வதைத் திராவிடர் கழகம் தடுக்கவரவில்லை. தாராளமாகச் செய்யட்டும் தரணியை ஆள வேண்டுமென்ற "தாராள மனப்பான்மை" கொண்டவர்களல்லவா, அவர்கள்! தடியடிதர்பார் துணையும், தனவேந்தர்களின் தயவுமிருக்கிறது, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவருக்கு. இருந்தும் அவர் திராவிடர் கழகத்தைத் தூற்றுவானேன்? அதற்கும் காரணம் இல்லாமலில்லை.

காங்கிரஸ், இன்று தேய்பிறையிலிருக்கிறது. கழகம் வளர்பிறையிலிருக்கிறது. அதாவது நாளுக்கு நாள் காங்கிரஸ் கரைந்துகொண்டு வருகிறது; கழகமோ, மக்களிடையே மதிப்புப்பெற்று மலர்ந்து மாபெரும் வளர்ச்சியடைந்து வருகிறது. இப்படிப்பட்ட நிலையிலே, பதவிப்பிரியர்களாகிய காங்கிரஸ்காரர்களை எதிர்த்துப் பகுத்தறிவாளர்களாகிய கழகத்தார் என்றாவது ஓர்நாள் தேர்தலில் நின்றால் தாம் படுதோல்வி அடைய நேரிடும் என்பதைக் காமராஜரும் அவர் கூட்டத்தாரும் நன்குணர்ந்திருக்கின்றனர். ஆகவேதான் வளர்ந்து வரும் மாபெரும் எதிர்ப்புச்சக்தியை முன்கூட்டியே அழித்துவிட்டு, ஏகபோக ஆட்சி செலுத்த எண்ணமிட்டிருக்கிறார்கள் ஏகாதிபத்திய 'வாரிசுகள்'. இந்த உள்ளெண்ணத்தைக் கொண்டு கழகத்தைப்பற்றிய தவறான கருத்துக்களை மக்களிடையே பரப்பி, கழகத்தைக்கரைத்துவிடலாமென்று, கனவு காண்கிறார்கள் காமராஜர் திருக்கூட்டத்தார்.

காங்கிரஸ்காரர்கள் போன்று, திராவிடர் கழகத்தார், எந்தப் பிரச்சினையையும், திட்டமின்றித் தீர்க்காலோசனையின்றிக் குழப்புகிறவர்களல்ல. திராவிடர் கழகத்தின் திட்டங்களையும், கொள்கைகளையும் சாதாரண மட்டரகக் காங்கிரஸ்காரர்கள்தான், சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதை ஒருவாறு

**வீ சர்பந்தன்**

ஒப்புக்கொண்டாலும், மந்திரி சபையையே மாற்றியமைக்கக் கூடிய மதியூகி, மகத்தான சக்தி வாய்ந்த 'மாபெருந் தலைவர்' காமராஜர் கூட உணராமலிருப்பார் என்று நாம் எண்ணுவதற்கில்லை. பொது மக்களிடையே விஷமப் பிரச்சாரம் செய்து, போட்டிக் கட்சிகளைப் பொசுக்கிவிடலாமென்ற எண்ணத்திலேதான் காமராஜர் இப்படித் தாறுமாறாகக் கூறுகிறார் என்பதை ஆராயத் தேவையில்லை. திராவிடர் கழகம் தேர்தலில் கலந்துகொள்ளப் போவதில்லையென்பதை அடிக்கடி தலைவர் பெரியார் அவர்கள் கூறி வந்தும், தோழர் காமராஜர் எதையும் அறியாதவர் போலக் கழகத்திடம், தேர்தலில் நின்றுபார் என்று சவால் விடுக்க வரிந்து கட்டிக்கொண்டு வருகிறார். இது வீரமுமல்ல விவேகத்தின் பாற்பட்டதுமல்ல.

தோழர் காமராஜர் கழகத்துக்கு விடுத்திருக்கும் சவால் இதோ:—

"உலக முழுதும் ஒன்றுபட வேண்டுமென்ற தத்துவம் வளர்ந்து வரும் சமயத்தில், நாட்டை மேலும் துண்டாட வேண்டுமென்று திராவிடர் கழகத்தார் இங்கு பிரச்சாரம்செய்து வருகின்றார்கள். குழப்பவேலைகளில் ஈடுபடுவதை விட்டு, தேர்தலில் நின்று, அவர்கள் ஜெயிக்கட்டும். பொதுமக்கள் ஆதரவு கிடைத்தால், கோயில்களை இடிக்கட்டும். ஹிந்தி புத்தகங்களை யெல்லாம் எரிக்கட்டும். அதைவிட்டு, விட்டு துவேஷப்பிரச்சாரத்தைச்செய்து கொண்டிருப்பது நாட்டில் குழப்பத்தை உண்டாக்கும் நோக்கத்துடன்தான். நாடு பிரிக்கப்பட்டால் நமக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் போதும், ஜாதியின் பெயராலும் மதத்தின் பெயராலும், வர்க்கபேதத்தின் பெயராலும் குழப்பத்தை உண்டாக்க முயல்வோருக்கு இடந்தாரதீர்கள். இன்று நாட்டுக்குத் தேவை அமைதிதான். ஆகையால் அமைதியைப் பாதுகாக்கப் பாடுபடும் காங்கிரசை ஆதரியுங்கள்."

என்று 5—6—49-ல் குடியாத்தத்தில் காமராஜர் பேசியிருக்கிறார், அல்ல தேர்தல் கீதம் பாடியிருக்கிறார். இரண்டாண்டுக் காலத்தில் தாங்கள் நாட்டுக்குச் செய்த நன்மைகளைப் (?) பற்றியோ, அல்லது இனி செய்யப்போகும் நன்மைகளைப் (?) பற்றியோகூறித்தங்களை (காங்கிரசை) ஆதரியுங்கள் எனக் காமராஜர் கேட்டிருக்கலாம். அதுதான் முறை, நியாயமுங்கூட. அதைவிடுத்துத்திராவிடர் கழகத்தைக்குறைகூறித் தேர்தலில் நின்றுபார் என்று வெற்றுச் சவால் விடுத்துச் சல்லடம் கட்டத் தேவையில்லை. கழகக் கொள்கைகளைச் சரியாகப் புரிந்துகொள்ளாத

(2-ம் பக்கம் பார்க்க)

### உரிமைக்குப் போராடிய வீரன்

# எடியன் டோலட்

அயர்ந்து கிடக்கும் ஒரு நாட்டை, தங்கள் வலிமையை மறந்து கிடக்கும் ஒரு நாட்டு மக்களை, அந்நாட்டின் சாரமற்ற மக்கட்சமூகத்தைத் தட்டி எழுப்புவன உயிருள்ள பேச்சு; வீரமுள்ள வார்த்தைகள்; உள்ளம் உருகி, உணர்ச்சி மிகுந்து பேசும் உண்மை வீரனின், மக்கள் மனதை மருட்சி கொள்ளும் சொற்பொழிவு. இது சுதந்திரத்தின் முதல் படி. அடுத்துள்ளது, அத்தகைய வீரனின் ஆழ்ந்த கருத்துக்களை அடுக்கிக் காட்டும் எழுத்துரிமை. அடிமைத்தனத்தில் ஆழ்ந்து கிடக்கும் தன் நாட்டு மக்களைத் தட்டி எழுப்பப் பேச்சு—எழுத்துச் சுதந்தரங்களைக் கோருகிறான், அந்நாட்டின் விடுதலை வீரன். பேச்சு மூலமாகவோ எழுத்து மூலமாகவோ தனது விடுதலை வேட்கையை வெளியிட விரும்புகிறான், வேறொருவரின் அடிமையை அகற்ற விரும்பும் அறிவு வீரன். ஆனால் அவை இரண்டும் ஆளும் வர்க்கத்தாரால் பூட்டிடப்படுமானால் அதையும் மீறுகிறான். மீறியதினால் ஏற்படும் ஆளுவோரின் மிருகத்தண்டனையையும், மிக மகிழ்ச்சியுடன் வரவேற்பான் வைரமனம் கொண்ட சுதந்தர வீரன்.

இத்தகைய வீரர்கள் எத்தனையோ பேர் இருந்து மடிந்தார்கள். இந்நிலவுலகில் அவர்களில் தலையாய் நின்றோன், இன்றும் பிரான்ஸ்நாட்டு மக்களின் மனதில் மறைந்திருக்கும் வீரன்தான் 'எடியன் டோலட்' என்பான். உயிரை வேண்டுமானாலும் விட்டுவிடும் தன்மையன். எடுத்தகாரியத்தை முடிப்பான் வேண்டி, செயலில் அவ்வளவு பிடிவாதம் கொண்டவன். 15, 16-ம் நூற்றாண்டுகளில் தான் மேல் நாடுகளில் கல்விபரவ ஆரம்பித்தது என்பதை எவரும் அறிவார்கள். அத்தகைய புதிய ஒளி பரவி வந்த சமயமும் இந்த வீரன் வாழ்ந்த காலமும் ஒன்றுபட்டிருந்தன. பிரான்ஸ்நாட்டில்மக்கள் புத்தகங்களைப் புரட்டிப் படிக்கப்புறப்பட்டார்கள். அதே சமயத்தில் தான் கிறிஸ்துவ மத புரட்சியை அல்ல சீர்திருத்த உணர்ச்சியை ஊட்ட அரும்பாடு பட்டார் மார்ட்டின் லூதர்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் பிறந்தான் பிரான்ஸ்நாட்டில் டோலட்—எழுத்துரிமைப் போர்வீரன். அவ்வுரிமைக்கே வருந்தி உழைத்தான். வாழ்வைப் பலியிட்டான், அவ்வுரிமைப் போராட்டப் பொற்பீடத்திலே.

இவனுடைய தாய் தந்தையர் யார் என்பதையோ பிறந்த ஊர் நாள் என்ன என்பதையோ அறிய முடியவில்லை. எப்படியோ சிறு வயதில் லத்தீன் மொழியைக் கற்பதில் கவலை கொண்டான். சமய நூல்களை ஆராய்வதிலும் மிக்க ஆர்வங் காட்டித்தான் வந்துள்ளான். 17-வது வயதில் மதுவா என்னுமிடத்திலுள்ள இத்தாலிய சர்வகலாசாலையில் சேர்ந்து பயின்றான். இங்கு 4 ஆண்டுகள்தான் பயின்றான். ஆனால் அவனுடைய அறிவுமிளிர்ச்சி அவனை உயர்த்திவிட்டது உத்தியோகப் படிப்புக்கு. முதலில் பிரான்ஸ் நாட்டின் பிரதிநிதியாகக் கிரேக்கநாட்டிற்குச்சென்ற லிமோகஸ் பாதிரியாரின் அந்தரங்கக் காரியதரிசியாக நியமனம் பெற்றுப் புறப்பட்டான். அந்தச் சமயம் அவனுடைய வயதோ 21. அங்கு சென்று அறிவைப் பெருக்க ஆர்வங்கொண்டான். பண்டிதர் ஒருவரின் பிரசங்கத்தைத் தொடர்ந்து கேட்டான், அறிவைப் பெருக்கிக் கொண்டான்.

அதோடு நின்றுவிடவில்லை அவ்வீரன். சட்டப்படிப்பில் தேற வேண்டுமென்ற எண்ணம்எழுந்தது. டொலவுச் என்ற லண்டன் நகரின் சிறந்த இடத்தில் இருந்து கற்கக் கருத்துக்கொண்டான். சொந்த ஊரை அடைந்தான். சேர்ந்தான் சட்ட கலாசாலையில். உடனே ஆரம்பித்தன இவனது எதிர்பாராத் தொல்லைகள். அந்தக் கலாசாலையில் ஏராளமான மாணவர்கள் எல்லா நாடுகளிலிருந்தும் வந்து பயின்றார்கள். ஒவ்வொரு நாட்டு மாணவர்களும் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். அவரவர்கள் அவர்கள் நாட்டுக் கொடிகளை வணங்கி, அவரவர்களின் மத குரு தினத்தை வெகு சிறப்பாகக் கொண்டாடி வந்தார்கள். இந்தப் பயித்தியம் பலம் கொண்டது. அதிக ஆடம்பரத்துடன் ஆர்ப்பரிக்க ஆரம்பித்தார்கள் அந்த விழா நாட்களில். மிகவும் தொல்லையாக இருந்தது ஆசிரியர்களுக்கும் அவர்களுக்கு மேலுள்ள அரசாங்க அதிகார வர்க்கத்திற்கும். உடனே ஆரம்பித்தது அரசாங்கம், தனது அடக்குமுறையை வீச. மேற்படி விழாக்கள் சம்பந்தமான கூட்டங்கள் கூடக் கூடாதென்று உத்தரவிட்டது. அதுபற்றிய பிரசுரங்கள் புத்தகங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. பார்த்தனர் மாணவர்கள். ஒன்று திரண்டனர், உத்தரவை மீற உறுதியும் செய்தனர். இந்தக் கிளர்ச்சியை உச்சியிலிருந்து நடத்த ஒப்புக்கொண்டான் நமது டோலட். கேட்க வேண்டுமா, அன்றைய எதேச்சாதிகார அரசாங்கத்தின் எடுபிடிகள் இவனை எழுதிக் கொண்டார்கள், அரசாங்கத்திற்கு ஆழமான விரோதி என்று.

இன்றுள்ள ஜனநாயகக்காரர்களின் சரியற்ற காரியங்களைக் கண்டவர்கள், அன்றைய ஏகபோக அதிகாரம் ஓச்சிவந்த இனத்தவரின் இத்தகைய செயலைக் கண்டு சிறிதும் சினங் கொள்ளார். இதற்குத் துணையாக எதிர்பாராத சம்பவம் ஒன்று

ஏற்பட்டது. ஒருநாள் தெருவில் சென்றுகொண்டிருந்த சமயம்யாரோ சிலர் டோலட்டைத் தாக்கினார்கள். எதிர்பாராத தாக்குதலில் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளக் கருத்துக் கொண்ட டோலட், எதிரியை இடித்தான். எக்கச்சக்கமான இடியால் இறந்துபட்டான் எதிரிகளில் ஒருவன். எதேச்சாதிகாரத்தின் ஏவலர்கள் எட்டிப் பிடித்து இரும்புக் கம்பிக் கொட்டடியில்இட்டுவிட்டார்கள். ஏன் என்று எதிர் வழக்காடவில்லை யாரும் அவனுக்காக. மூன்று நாள் கழித்து விரட்டி விட்டார்கள் வரக்கூடாது இந்நாட்டிற்கினி என்று. இது போதும் என்று ஏகினான் பாரிஸுக்கு, எங்கிருந்தால் என்ன என்ற எண்ணத்துடன். நேராக முதலாவது பிரான்ஸிஸிடம் சென்றான். அவர்தான் அந்தச் சமயம் அந்நாட்டின் அதிபதியாய் அக்ராசனம் அமர்ந்திருந்தார். அடைக்கலம் புகுந்தான் அவரிடம். தான் செய்த தவறைத் தள்ளிவிட வேண்டினான். அவருக்கே அர்ப்பணமாக அளித்தான் அதுவரை ஆராய்ந்து எழுதி முடித்திருந்த லத்தீன் மொழி பற்றிய இரண்டு பாக நூற்களை.

அந்த எழுத்துப் பிரதிகளை அச்சிட்டுக் கொடுக்க ஆள் அகப்படுமா? என்று அலைந்தான். அதே ஆவலுடன் ரியான்ஸ் நகரைச் சேர்ந்தான். ஏன்? அந்த இடந்தான் அன்றுசிறப்புற்றிருந்தது. புத்தக வெளியீட்டிலும், விற்பனையிலும் முதலிடத்தைப் பெற்றிருந்தது. அந்த இடத்தை அடைந்தவுடன் கிளெமண்ட்மாரெட் என்பார் தோழனாகத் தோன்றினார் டோலட்டுக்கு. கிளெமண்ட் மாரெட் அன்று பிரான்ஸ் நாட்டின் பெரியகருவியாக இருந்தார் என்றால், எப்படி ஏற்பட்டது இருவருக்கும் தோழமை என எண்ணவேண்டுமா? அதோடு அல்லாது அவரும்அரசாங்கத்தின்அரிய விரோதிதான். ஏன் மதவிரோதமான குற்றம் செய்ததற்காக இத்தாலிநாட்டில் இருந்துவந்தார். ஆனால் எத்தனை நாட்களுக்கு இன்னொருவர் நாட்டில் இருந்துவாழ முடியும்! அதுவும் நாட்டு மக்களின் நன்மையில் ஆர்வங்கொண்டவர்களுக்கு எப்படி முடியும்! ஆழ்ந்து யோசித்தார். பிரான்ஸிஸ் மன்னனிடம் பிழைபொறுத்துக்காப்பாற்ற வேண்டுவோம் என்ற கருத்தைக் கொண்டார் கடுகிவந்தார் காணாதிருந்த தாய்நாட்டிற்கு, இருவரும் சேர்ந்து எழுதினார்கள் பிரான்ஸிஸ் பெருமானுக்குப் புத்தகங்கள் வெளியிட அனுமதி கோரி. மன்னனும் மாரெட்டை முந்திய குற்றங்களுக்கு வகை செய்யக்கேட்டான். டோலட்டுக்குமட்டும் பத்துவருடங்களுக்குப் புத்தகங்கள் வெளியிட லைசென்ஸ் கொடுத்தான். அதுவும் இத்தாலி, கிரீக், லத்தீன், பிரான்ஸ் இந்த நான்கு மொழிகளிலும் வெளியிடலாம் வேண்டிய புத்தகங்கள் என்று. 'ஆனால்' என்ற அசட்டுமொழி அரசாங்க உத்தரவுகளில் இல்லாதிருப்பது இன்றுகூட மிக அருமை. ஆகவே டோலட்டின் உத்தரவில் 'ஆனால் அச்சிடுவதற்கு முன்னால் அவன் தன்னுடையஎழுத்துப்பிரதிகளை பாரிஸ், பிரான்ஸ் என்ற இடங்களில் இருந்தஇன்னின்னாருக்குக் காட்டவேண்டுமென்ற' நிபந்தனை இருந்தது.

மன்னரின் மனதறிந்த மாரெட் தனது மதவிரோத செயல்களுக்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். டோலட் தோற்றுவித்தார் ஒரு அச்சிடும் அரங்கத்தை. அது ஆரம்பித்த சிறுகாலத்திற்குள் சிறந்த செல்வாக்கை அடைந்தது. ஆனால், தன்னலமற்ற தக்கோரிடம் தங்கி இருப்பதில்லை தரணியில் எந்த இலாபந்தரும் ஸ்தாபனமும். அதுவும் இரண்டுபேரிடம் எப்படி நிலைத்திருக்கும் நீண்டநாட்களுக்கு. இந்த இருவரும் வேகமான இரத்தத் துடிப்பைப்பெற்றவர்கள். எதையும் எண்ணி எண்ணிப்பார்த்து இருந்து இருந்து யோசித்து, இதைச் செய்தால் இன்னது வருமேஎன்பதையும் எண்ணாது எடுத்ததை முடிக்கும் காரியவாதிகள். பயம் என்ற பதத்தையே பரிகசிப்பவர்கள். இரும்பைவிட இறுகிய நெஞ்சுரங்கொண்டவர்கள். இத்தகையவர்கள் எண்ணியதையெல்லாம் எழுதப் பேனா பிடித்தால் சுதந்தரம் முன்பே கிடைத்திருக்கும்.

டோலட் எழுதிய லத்தீன்மொழி பற்றிய நூல் பல பதிப்புகளாகப் பறந்தன. பரந்த உலக மக்களிடையே 'புதிய சங்கல்பம்' என்ற பெரும்நூல்கள் பத்தாயிரக் கணக்கில் பதிப்பிக்கப்பட்டன. பணம்கொடுத்துவாங்கி மக்கள் படித்தார்கள். இந்த வெற்றி எதிரிகளின் கண்களைக் கருக்கியது. எதிரிகள் யார் தெரியுமோ? அவர்கள்தான் மதவாதிகள். இந்த மதவாதிகள்தான் மக்கள் சமூகத்தின் மாசற்ற விரோதிகள் என்பதற்கு எத்தனையோ சான்றுகளில் இதுவும் ஒன்று. 1542-ம் ஆண்டு அடைத்தார்கள் கொட்டடியில் மதவிரோதமான புத்தகங்களை டோலட் வெளியிட்டார் என்பதற்காக. நலிவுற்றான் சிறையிலும் வெளியிலுமாக. உயிருடன் இருந்தால்ஆபத்துஎன்று எண்ணிற்று இறுமாப்புக் கொண்ட மதகுருக் கூட்டம். இறுதியாக டோலட்டின் உடலை இருகூறாக்கக் கட்டளை இட்டது. எழுதி வெளியிட்ட எல்லாப் புத்தகங்களையும் எரித்துச் சாம்பலாக்கவும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

அன்று அந்நாடுகளில் அரசனைவிட அதிக அதிகாரம் வகித்திருந்தது அந்த மதமனம் கொண்ட மக்கள் கூட்டம் என்பதை மலையுச்சியிலிருந்து காட்டுகிறது உலக சரித்திரம். ஆகவே டோலட்டின் இந்தத் துணையற்ற துயரம் தந்த வழக்குத்தெரியவேதெரியாதுபிரான்சிஸ் மன்னனுக்கு. கடவுளைக் காட்டிக் காசைப் பிடுங்கி, மக்களைக் காட்டுமிராண்டிகளாகக் கண்காணித்து வந்த அந்தக் கல்மனக்கயவர் கூட்டம், நமது டோலட்டின் கழுத்தைக் கத்தரித்தது மாபர்ட் என்ற இடத்தில். ஒரு டோலட்டின் உயிர் பறிக்கப்பட்டால் உண்டாவார்கள் ஆயிரக் கணக்கில் உண்மை வீரர்கள் என்பதை உணரமுடியுமா ஒய்யார மதவாதிகளுக்கு! மதவிரோத குற்றத்திற்காக மடியும் டோலட்டுக்கு மக்கள் சிலை கட்டி, மனத்தால், வாயால் வாழ்த்துவார்கள் பின்வரும் காலத்தில், என்பதை எப்படி அறிய முடியும் அந்தக் கூட்டத்தால்! இன்று அவ்வீரன் பலியிடப்பட்ட அந்த இடத்திலேயே எழுந்து நிற்கிறது டோலட்டின்

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.